ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

பொதுசன நூலகம்

SATS-TECH ENGINEERS
NEW PACKAGES & RENEWAL
CALL :- 222 5908/222 8812

# வலம்புரி

கள்: பதின்னான்கு

Valampurii

0 வள்ளுவர் ஆண்டு 2040 தை 19 ஞாயிற்றுக்கிழமை (01.02.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 044

## 106 பேர் மட்டுமே வவுனியா சென்றனர்

# 8 மணித்தியால அவகாசம் முடிந்தது

# ரும் தாக்குதலை மக்களும் எதிர்கொள்வர்

(காழும்பு)

ரசினால் அறிவிக்கப்பட்ட 48 மணிநேர ாலிக யுத்த நிறுத்தம் முடிந்துள்ளதால் ணியில் யுத்தம் உக்கிரமடையும் அபா ஏற்பட்டுள்ளதாக மனிதநேய அமைப்புக் எச்சரித்துள்ளன. (14ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமக்களை பாதுகாக்க பொது அமைப்புகள் தீவிரம்

(கொழும்பு)

வன்னியில் யுத்தப் பிரதேசத்திலிருந்து பொதுமக்கள் வெளியேற அரசாங்கத்தின் 48 மணிநேர கால்க்கெடு நேற்றிரவுடன் படைந்தது.

இருப்பினும் அப்பாவி மக்கள் பாதிக்கப் படாமல் இருக்க போர் நிறுத்தத்தை நீடிக்கவும் அ சின் கெடு முடிபதற்குள் தமிழர்களைப் பாதுகாக்கவும் சர்வதேச தொண்டு நிறுவ னங்கள் கடைசிக் கட்ட முயற்சியில் நேற்று மும்முரமாக ஈடுபட்டிருந்தன.

இலங்கை அரசு அறிவித்த 48 மணி நேர காலக்கெடுவிற்குள் பொதுமக்கள் பெரு மளவில் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லவில்லை. சிறிய அளவிலேயே சென் றுள்ளனர். (14ஆம் பக்கம் பார்க்க)

## துகாப்பு வலயத்தில் நேற்றும் தாக்குதல் 50பேர் பலி; 169 பேர் படுகாயம்

(முல்லைத்தீவு)

லைத்தீவு மாவட்டத்திலுள்ள மக்கள் பு வலய பகுதியான சுதந்திரபுரம் று இடம்பெற்ற கடுமையான பீரங்கி வான் தாக்குதல்களிலும் உடையார் நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குத 2 சிறுவர்கள் உட்பட 34 தமிழர்கள் செய்யப்பட்டுள்ளதுடன் 129 பேர் டைந்துள்ளனர் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுதந்திரபுரம் மக்கள் பாதுகாப்பு வலயத் திற்குள் இடம்பெயர்ந்து திரளாக, தங்கியி ருந்த பொதுமக்கள் மீது நேற்றுக் காலை 9.30 மணியளவில் எறிகணைத் தாக்குதல் இடம்பெற்றது. இதில் 7 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன், 22 பேர் படுகாயம டைந்துள்ளனர்.

இதே பகுதி மீது பிற்பகல் 12.30 மணியள விலும் பிற்பகல் 2 மணியளவிலும் விமா னத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில்12 சிறு வர்கள் உட்பட 22 பேர் கொலை செய்யப்பட் டுள்ளதுடன் 78 பேர் படுகாயமடைந்துள்ள னர்.

இத்தாக்குதலில், அந்த பகுதி மக்களின் குடியிருப்புக்கள் பெருமளவு அழிந்துள்ளது டன் உடைமைகள் மற்றும் ஊர்திகளும் நாச மாக்கப்பட் (14ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழருக்காக மேலும் ஒருவர் தீக்குளிப்பு

(மதுரை)

ஈழத்தமிழ் மக்கள் படுகொலை செய்யப் படுவதைத் தடுக்க இந்திய அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையோடு மதுரையில் நேற்று ஒருவர் தன்னையே எரியூட்டினார்.

தமிழ் மக்களை கொன்று குவித்து வரும் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி தீக்குளித்த அவர் ஆபத்தான நிலையில் மது ரை அரச மருத்துவமனையில் தற்போது சிகிச் சை பெற்று வருகிறார்.

விடுதலை (14 ஆம் பக்கம் பார்க்க)

## களின் சர்வதேச பிரதிநிதியாக பத்மநாதன் நியமனம்

(கொழும்பு)

லைப் புலிகள் சார்பாக உலகத் ளை தொடர்பு கொள்வதற்காக க்கத்தின் சார்பில் உயர்மட்டப் பிரதி சல்வராசா பத்மநாதன் நியமிக்கப் ர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லைப் புலிகள் தற்போ ர்வதேசத் ர் என்று புதிய துறை ஏற்படுத்தி றுப்பாளராக இவரை நியமித்துள் ளனர். இத்தகவல் புலிகள் ஆதரவு இணை யத்தளங்களில் வெளியாகியுள்ளது.

இந்த நியமனம் குறித்த தகவலை விடுத லைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப் பாளர் பா.நடேசன் உறுதிப்படுத்தியுள்ளார்.

புலிகள் தலைமையின் வழிகாட்டுதல்படி செல்வராசா பத்மநாபன் வெளிநாடுகளுக்கான எங்கள் அமைப்பின் தொடர்பாளராக செயல் படுவார் என்று அவர் கூறியுள்ளார். (ந-5)

## பாதுகாப்புப் பிரதேசத்தை இருதரப்பும் உறுதி செய்ய வேண்டும்

### ஐ.நா. செயலர் கோரிக்கை

(ஜெனீவா)

வன்னியில் மோதல்கள் நடைபெற்று வரும் பகுதிகளில் சிக்கியுள்ள மக்கள் அங் கிருந்து வெளியேறுவதற்கான பாதுகாப் பான பிரதேசத்தை அரசாங்கமும் விடுத லைப் புலிகளும் உறுதிப்படுத்த வேண்டும் என்று ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

முரண்பாட்டுப் பிரதேசங்களுள் சிக்கி யுள்ள பொதுமக்கள் பாதுகாப்பான பிரதே சம் என தாம் கருதும் (அரசாங்கக் கட்டுப்பாட் டுப் பகுதி உட்பட) பிரதேசங்களுக்குச் செல் வதை அனுமதிக்க வேண்டும் என்று ஐ.நா. செயலாளர் (14ஆம் பக்கம் பார்க்க)

## ட வைத்தியர் குழு வுனியா விரைவு

(கொழும்பு)

ரியிலிருந்து வரும் நோயாளர் ண்ணிக்கை அதிகரித்திருப்பதால் வத்திய குழு வொன்று வவுனியா னுப்பிவைக்கப்பட்டிருப்பதாக சுகா மச்சு அறிவித்துள்ளது.

வத்திய அதிகாரிகளும், உதவி ளும் வவுனியாவுக்கு அனுப்பி ட்டிருப்பதாகவும் இவர்கள் வன்னி காயமடைந்து வரும் நோயாளர் ன சிகிச்சைகளை வழங்குவார்கள் சுகாதார அமைச்சு தெரிவித்துள்

ரியா (14ஆம் பக்கம் பார்க்க)

## பெப்.4 இல் தமிழகம் முழுவதும் வேலை நிறுத்தப் போராட்டம்

### நேற்றுக் கூடிய இலங்கை தமிழர் பாதுகாப்பு அமைப்பு முடிபு




(சென்னை)

ஈழத்தமிழர் பாதுகாப்புக்காக தமிழகம் தழுவிய அளவில் எதிர்வரும் 4ஆம் திகதி புதன்கிழமை பொது வேலை நிறுத்தமும் சனிக்கிழமை 7ஆம் திகதி கறுப்புக்கொடி பேரணிகளும் நடத்தப்படும் என இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத்தமிழர் நலன் காக்கும் கலந்தாய்வுக் கூட்டம் சென்னை தியாகராஜ அரங்கில் நேற்று நடைபெற்றது. (14ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர்களை காக்க புலிகள் மீதான தடையை அமெரிக்கா நீக்க வேண்டும்

## "ஒபாமாவுக்கான தமிழர்கள்" வேண்டுகோள்

அமெரிக்காவின் புதிய அரசாங்கம் - புலிகள் இயக்கம் தொடர்பான தனது கொள்கையை மறுபரிசீலனை செய்து - தனது பயங்கரவாத பட்டியலில் இருந்து விடுதலைப் புலிகளை நீக்கும் என "ஒபாமாவுக்கான தமிழர்கள்" அமைப்பு நம்புவதாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் குடியேறியிருக்கும் மற்றும் அமெரிக்காவில் பிறந்த தமிழர்களைக் கொண்ட ஓபாமாவுக்கான தமிழர்கள் என்ற அந்த அமைப்பின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இலங்கையில் நடைபெற்று வரும் போரை விடுதலைப் புலிப் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என இலங்கை அரசு சித்திரித்து வருகிறது. மேற்குலகமும் மேற்குலக ஊடகங்களும் கூட உண்மையை மறைத்து - கொழும்பு அரசின் போக்கிலேயே பெருமளவில் செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

இது ஏற்றுக்கொள்ள முடியாதது. ஏனெனில் அரச நடவடிக்கைகளே உண்மையில் மூன்று தசாப்தங்களாக விடுதலைப் புலிகளை உருவாக்கியிருகின்றது.

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர்-அதிகாரங்கள் பெரும்பான்மை சிங்கள இனத்தினால் பறித்தெடுக்கப்பட்டதுடன் அதனை தமிழர்களுடன் பகிர்வதற்கு அவர்கள் முன்வரவில்லை.

தமது அரசியல் உரிமைகளைப் பெற அமைதியான - சட்டபூர்வமான வழிகளில் தமிழ் மக்களாலும் அவர்களது தலைவர்களாலும் முப்பது வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் யாவையும் அரசு முறியடித்தது.

தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்புப் போர்-பிரித்தானியா இலங்கையை விட்டு சென்ற 1948 ஆம் ஆண்டிலேயே தொடங்கி விட்டது. அன்று முதல் தமிழ் மக்களின் நிலங்கள் அபகரிக்கப்பட்டு சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர்.

தமிழருக்கு எதிரான நாடு தழுவிய இன வன்முறைகள் மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்பட்டன. சிங்கள மொழி அதிகாரபூர்வ மொழியாக பிரகடனப்படுத்தப்பட்டு தமிழ் மக்களின் வேலை வாய்ப்புக்களும் கல்வியும் தடுக்கப்பட்டது.

பௌத்த சமயம் நாட்டின் சமயமாக பிரகடனப்படுத்தப்பட்டதுடன் இந்து சமயமும் கிறிஸ்தவ சமயமும் புறக்கணிக்கப்பட்டன.

விடுதலைப் புலிகளின் பிறப்பிற்கு முன்னரே இவை எல்லாம் நடைபெற்றுள்ளன.

அரசின் இந்த தமிழின ஒடுக்குறைகளும் வன்முறைகளுமே விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தை உருவாக்கியிருந்தது.

விடுதலைப் புலிகளின் பிறப்பு தவிர்க்க முடியாததாக அமைந்தது.

தமிழ் மக்களுக்கு எதிரான அரசின் ஆயுத வன்முறைகள் முடிபற்றவையாகத் தொடர்கின்றன. எனவே புலிகள் மீதான தடையை அமெரிக்க அரசு நீக்கவேண்டுமென கேட்கப்பட்டுள்ளது. (ந-5)

# பரராஜசேகரப் பிள்ளையாருக்கு இன்று மகா திருக்குட முழுக்கு



வரலாற்றுப் பெருமை மிக்க இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோவில் மகா கும்பாபிஷேகம் இன்று இடம்பெறுகிறது.

இன்று காலை 7.26 மணிக்கு இராஜகோபுர திருக்குட முழுக்கும் காலை 8.15 மணிக்கு மகாகும்பாபிஷேகமும் இடம்பெறும். (ந-14)

# வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் இன்று பதியலாம்

## சமூக சேவைகள் அமைச்சு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வடமாகாணத்திற்கான செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா, வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டினை நோக்காகக் கொண்டு நடைமுறைப் படுத்தப்படவுள்ள வேலைத்திட்டத்திற்கான மாணவர்களின் விபரங்கள் இன்று அமைச்சரது யாழ். அலுவலகத்தில் பதியப்படவுள்ளன.

இத்திட்டத்தில் இணைந்து பயன் பெறவிரும்பும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களை இன்றைய தினம் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

பதிவு செய்ய வருபவர்கள் மாணவர்களின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் மற்றும் கல்விச் சான்றிதழ்களின் பிரதிகளையும் கொண்டு வரவேண்டும். உதவி பெறும் மாணவர்கள் தவறாது சமூகம் தரவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# நோயாளர்களுக்கு உதவியாக வந்த 122 பேர் ஓமந்தையில் கைது

(வவுனியா)

வன்னிபெரு நிலப்பரப்பில் படையினரின் எறிகணைத்தாக்குதலில் படுகாயமடைந்து வவுனியா மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட நோயாளர்களுடன் உதவிக்கு வந்த 122 பேர் ஓமந்தை சோதனை சாவடியில் படையினரால் கைது செய்யப்பட்டு நெடுக்குளம் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இத்தகவலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் நோயாளர்களுடன் வந்த 90 குடும்பங்களைச் சேர்ந்த 122 பேர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் கொழும்பில் உள்ள இந்திய தூதுவர் ஆலோக் பிரசாத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

உதவிக்கு வந்த உறவினர்கள் கைது செய்யப்பட்டமையினால் நோயாளர்கள் பெரும் சிரமப்படுவதாக இந்திய தூதுவரிடம் முறையிட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை அவ்வாறு [illegible] செய்யப்படவில்லை எனவும் [illegible] ளர்களுடன் உதவிக்கு வந்[illegible] 2 பேர் பாதுகாப்பாக வவுனி[illegible]ல் உள்ள நலன்புரி நிலையத்தி[illegible] தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்[illegible] குணசேகர தெரிவித்தார். (ந-5)

# முத்துக்குமாரின் இறுதி ஊர்வலம் மக்கள் தீப ஒளி ஏந்தி அஞ்சலி

(சென்னை)

ஈழத்தமிழர்களுக்காக நேற்று முன்தினம் சென்னையில் தீக்குளித்து இறந்த முத்துக்குமாரின் இறுதி ஊர்வலம் சென்னை கொளத்தூரில் உள்ள அவரது வீட்டில் தொடங்கி இறுதிச் சடங்கு நடைபெறும் மூலக்கொத்தளம் இடத்துக்கு சென்றடைய மூன்று மணிநேரம் எடுத்தது.

மூன்று கிலோ மீற்றர் தூரத்திற்கு மக்களின் ஊர்வலம் இருந்தது. சென்னை மாநகரில் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியுள்ள இந்த இறுதி ஊர்வலத்தில் லட்சக்கணக் கான தமிழுணர்வாளர்கள் பங் கெடுத்துள்ளனர்.

பெரம்பூர் தேசிய நெடுஞ்சாலையில் இந்த ஊர்வலம் சென்றபோது பொதுமக்கள் முத்துக்குமாரின் உடல் செல்லும் வாகனத்துக்கு தீப ஒளி ஏந்தி அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை முத்துக்குமார் உடல் செல்லும் வாகனத்தில் இயக்குநர் அமீர் அமர்ந்திருந்தார்.

இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கத்தைச் சேர்ந்த வைகோ, பழநெடுமாறன், திருமாவளவன் உட்பட அரசியல் தலைவர்களும் பாரதிராஜா, சீமான், செல்வமணி உட்பட திரைப்பட உலகினரும் தமிழுணர்வாளர்களும் இலங்கைக்கு துணைபோகும் மத்திய அரசை கண்டித்து ஆவேசமாக கோஷமிட்டபடியே இறுதி ஊர்வலத்தில் சென்றனர். (ந-5)

# உடையார்கட்டுப் பகுதியில் பலியானோர் பெயர்விபரம்

(வவுனியா)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள உடையார்கட்டுப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை படையினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் ஆசிரியை மற்றும் சிறுமி உட்பட 4 பேர் கொலை செய்யப்பட்டுள்ளதுடன் 3 சிறுவர்கள் உட்பட 19 பேர் காயமடைந்துள்ளனர்.

பலியானவர்களின் பெயர் விபரம் வருமாறு; மனோறஞ்சிதமலர் (ஆசிரியை), செ.புஸ்பராஜா (வயது 23), இ.சிவதயாளினி (வயது 15), பு.பரமேஸ்வரி (வயது 32),

இத்தாக்குதலில் 3 சிறுவர்கள் உட்பட 19 பேர் காயமடைந்தனர். அவர்களின் பெயர் விபரம் வருமாறு; கி.துளசிகா (வயது 3), கலைஞன் (வயது 7), குகவதனி (வயது 12), து.தயாபரன் (வயது 23), கி.கர[illegible] (வயது 22), க.மகேந்திரன் (வயது 53), பே.சண்முகராஜா (வயது 28), வள்ளியம்மை (வயது 55), சாரத[illegible] தேவி (வயது 37), செல்வராஜ[illegible] (வயது 58), சின்னப்பிள்ளை (வயது 73), கு.நாதன் (வயது 34), சசிசந்திரன் (வயது 24), சிவபாத[illegible] (வயது 72), பு.துஸ்யந்தன் (வயது 21), கோ.கிருபாதேவி (வயது 50), ஆ.மங்களேஸ்வரன் (வயது 37), [illegible] யூட் அன்ரனி (வயது 31), ம.சரியமலர் (வயது 45)

மேலும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பகல் ஒரு மணியளவில் தேராவில் பகுதியில் படையினர் நடத்திய எறிகணைத்தாக் குதலில் இரா[illegible] சிவதயாளினி (வயது15) என்ற சிறுமி கொல்லப் பட்டார். (ந-5)

# இலங்கையின் யுத்த நிலை பெரும் வேதனை தருகிறது

## அமெரிக்கா கவலை

(நாகர்கோவில்)

இலங்கையில் இடம் பெற்று வரும் யுத்தம் பெரும் வேதனையளிப்பதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிக்கையொன்றின் மூலம் அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து அமெரிக்கா பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தொடர்ச்சியாக உதவிகளை வழங்கி வருவதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் விரைவில் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு மக்களின் பாதுகாப்பு உறுதிபடுத்தக் கூடிய ஓர் சூழ்நிலை வெகு விரைவில் உருவாகும் எனத் தாம் நம்பிக்கை கொண்டுள்ளதாக அமெரிக்கா இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் ஊடகப் பேச்சாளர் றொபர்ட் வூட் தெரிவித்துள்ளார்.

ஊடகங்கள் மீதும் தமிழ் மக்கள் மீதும் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் பெரும் கவலையளிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-5)

# நாளை எனக்கு அகவை எழுபது



நாளைய (02.02.2009) மாலைப்பொழுதினை எழுத்துப் பணிக்காக இலங்கை கலாசார அலுவல்கள் அமைச்சின் "கலாபூசணம்-2008" விருது எனக்குக் கிடைத்த மகிழ்வினை உறவினர், நண்பர்கள், இலக்கிய அன்பர்கள் ஆகிய உங்களுடன் எமதில்லத்தில் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்

பொ.சண்முகநாதன்
(சண் அங்கிள்)

கந்தரோடை, சுன்னாகம்.
தொ.பே;060 2217867

(2216)


REPAIRING

Computer, Monitor, UPS, Printer, Cardrige Refil, Woofer, DVD, CD Player
என்பன உடனுக்குடன் திருத்திக் கொடுக்கப்படும்.

உங்கள் கணனிகள் அனைத்தும் உங்கள் வீடுகளுக்கோ, அலுவலகத்திற்கோ வந்து திருத்திக் கொடுக்கப்படும். திருத்திய பின்னர் உத்தர வாதம் வழங்கப்படும்.

STR Computer System
380, Navalar Road, Nallur, Jaffna.
(கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அருகில்)
T.P.- 021 4590775, Fax - 021 4590775
Mobile- 0774192275, 0712056606
(2090)

சாரதி தேவை

நற்பழக்கமுள்ள, நேர்மையான, வயது முதிர்ந்த, அனுபவம் உள்ள கார் சாரதி ஒருவர் பகுதிநேரமாக கடமையாற்ற உடன் தேவை. நற்சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

N.நாதன்,
துளசி ஓட்டோ,
தாளையடி ஒழுங்கை,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(2219)

தவறிவிட்டது

மதவடி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சுந்தரலிங்கம் லதா என்பவரின் பாஸ்போட் யாழ்ப்பாண பேருந்து நிலையத்தில் தவறவிடப்பட்டுள்ளது.

இதனைக் கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும்.

அருள்நாயகி,
நெல்லியடி.
(2218)

கணனி வகுப்புகள்

Diploma in Microsoft Office
Diploma in Desktop Publishing
Diploma in Accounting Package
Diploma in Hardware Technology
Diploma in Web Designing
Internet Technology (2 weeks Rs.1000)
(தொழில் புரிபவர்களுக்கு 5-6 மணிவரை)

STR Computer System
380, Navalar Road, Nailur, Jaffna.
(கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அருகில்)
T.P.- 021 4590775, Fax - 021 4590775
Mobile- 0774192275, 0712056606
(2089)

## சீமெந்து பக்கெட் ஒன்றின் சில்லறை விலை ரூபா 1600/-

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசிய சேவை ஆணையாளரினால் கப்பல் மூலம் அனுப்பிவைக்கப்படுகின்ற பொருட்களுக்கான கப்பல் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.

எனவே கப்பல் மூலம் யாழ். மாவட்டத்திற்கு எடுத்துவரப்படுகின்ற சீமெந்து பக்கற்று ஒன்றின் சில்லறை விற்பனை விலை 1600/- ரூபாவை விட அதி கமாக விற்பனையாளர்கள் பாவனையாளருக்கு விற்பனை செய்ய வேண்டாம் என யாழ். அரசாங்க அதிபர் அறியத்தந்துள்ளார்.

மேலும் தொடர்ந்து சீமெந்து கொண்டு வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுவதும், சில்லறை விலைகளைக் குறைக்கக்கூடிய சாத்தியங்களும் ஆராயப்படுகின்றன.

சீமெந்து விலை சம்பந்தமாக முறைப்பாடுகள் இருக்குமிடத்து மாவட்டச் செயலகத்திற்கு அறிவிக்குமாறு மாவட்டச் செயலர் க. கணேஷ் அறிவித் துள்ளார். (ஓ)

## நிறுவுனர் தினம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நிறுவுனர் நினைவுநாள் நிகழ்வு 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் கல்லூரி முதல்வர் அ. கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் பேராசிரியர் ப. சிவநாதன் கலந்து கொள்ள உள்ளார்.

அத்துடன் கல்லூரியின் சஞ்சிகையான 'தாமோதரன்' இதழின் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்ககழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ. குமரன் நிகழ்த்தவுள்ளார். (ஓ-29)

# திருநகர் அபிவிருத்திப் பணிகளில் பங்கெடுக்க அப்பகுதி மக்கள் முன்வருவதாக உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ். திருநகர் பகுதியில் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து அபிவிருத்தி வேலைத் திட்டங்களிலும் பங்கெடுத்து தங்களது முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவதாக அப்பகுதி மக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னிலையில் ஏகோபித்த குரலில் தெரிவித்துள்ளனர்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சரும் வட மாகாணத்திற்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா அமைச்சரை அவரது யாழ். அலுவலகத்தில் வைத்துச் சந்தித்து தங்களது பகுதியில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடும்போதே திருநகர் பகுதி மக்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

யாழ். குருநகர் பகுதி வெகுவிரைவில் முழுமையாக அபிவிருத்தி செய்யப்படவுள்ள நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இப்பகுதி மக்களுடன் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் குறித்து கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலின் போது திருநகர் பகுதியில் நிலவும் சமூக சீர்கேடுகளை அகற்றும் முகமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னிலையில் விழிப்புக் குழுவொன்று அமைக்கப்பட்டது.

இதன்போது காவல்துறை உயரதிகாரிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ஓ)

## தைப்பூச மஹோற்சவம்

திருநெல்வேலி தெற்கு பரமேஸ்வரா சந்தி அருள்மிகு. ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான தைப்பூச மஹோற்சவம் கடந்த 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் காலை, மாலை இருவேளைகளிலும் உற்சவம் நடைபெற்று தைப்பூச நன்நாளில் தீர்த்தோற்சவம் கொடி இறக்கத்துடன் நிறைவுபெறவுள்ளது.

இந்நிகழ்வில் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு இரதோற்சவமும் 8 ஆம் திகதி காலை 8 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடை பெறவுள்ளது. (ஓ-4)

## தீவகத்தில் பனங்கிழங்கு விற்பனையாகின்றது

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறையில் பனங்கிழங்கு சீசன் ஆரம்பமாகியுள்ளது. தீவுப் பகுதிகளான எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு, பருத்தித்தீவு ஆகிய இடங்களிலிருந்து வரும் பனங்கிழங்குகள் ஊர்காவற்றுறைக்கு வந்த பின்பு யாழ் கொண்டு செல்லப்படுகின்றன.

இங்கு ஒரு சோடிக் கிழங்கின் விலை 5.00 ரூபாய் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-72)

## தரம் 6 மாணவர்களுக்கான கணித பாட மதிப்பீடு - 1

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் தரம் 6 இல் கற்கும் மாணவர்களுக்கான கணிதபாட மதிப்பீடு -01 நாளை திங்கட்கிழமை சகல பாடசாலைகளிலும் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஓ-29)

## க.பொ.த.(உயர் தர) பரீட்சை முன்னணிப் பெறுபேறுகள் சில...

**இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்**

**கலைப்பிரிவு**

ABC - சி. சரிகாசினி
A2C - வி.பவிதா
ABS - வி. அனிதா
2BC - சு. ரஜீவன்
2BS - ச. சிந்துஜா
B,2C - வி. யாழினி, ந். நளினி, வ. பிரசாத்.
BCS - ச. தர்சா
3C - த. இளவரசன் , தி. நிந்துஜா.

# இருபாலை இந்து மயானம் புனரமைக்கப் பட மாட்டாதா?

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேல் இருபாலை கிழக்கு இந்து மயானம், இந்து மயானத்திற்கு செல்லும் வீதி என்பன திருத்தப்படாமல் உள்ளது.

இதனால் இங்கு நடைபெறும் கிரியைகளை சிறந்த முறையில் நடத்த முடியாமல் இருப்பதாக பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் வீசிய நிஷா புயல் காற்றினால் நிழல்தரும் மரமும் வேருடன் சாய்ந்து விழுந்து தற்போது வெட்டவெளியாகக் காட்சியளிக்கின்றது. அண்மைக்காலத்தில் இறந்தவர்களின் உடலை தகனம் செய்வதற்கு செல்பவர்கள் கடும் வெயில், மழை காரணமாக மிகவும் சிரமத்துக்குள்ளாகின்றனர்.

இப்பிரதேசம் வயல் நிலமாக உள்ளதால் மழை நீர் வற்றாமல் இருப்பதாலும் நிலத்தில் வைத்து எதுவும் மேற்கொள்ள முடியாதுள்ளது.

இதனால் இவ் இந்து மயானத்திற்குப் போகும் வீதியில் உள்ள இளைப்பாறு மண்டபத்தை அமைத்துத்தருமாறு வலி. கிழக்கு பிரதேச சபை மற்றும் வலி. கிழக்கு பிரதேச செயலாளர்களுக்கு எழுத்து மூலமாக அறிவித்தும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை உடன் மேற்கொண்டு கூடிய விரைவில் ஆவன செய்து தருமாறு பொதுமக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (ஓ-6)

## வாரம் ஒரு தகவல்

# பயணம் எங்கே?

"டிரைவர் சேர்! நான் உங்களுக்கு பக்கத்து சீட்டில் உட்காரலாமா?"

"தாராளமா உட்காருங்க. எந்த சீட்டிலும் யாரும் உட்காரலாம்."

"பஸ் பிரயாணம் என்றாலே எனக்கு ஒருமாதிரி இருக்கும்!"

"என்ன மாதிரி?"

"மயக்கம் வந்துவிடும். வாந்தி வருவது போல் இருக்கும். அதுதான்"

"டாக்டரைப் பார்க்க வேண்டியது தானே!"

"பார்த்தேனே!"

"அவர் என்ன சொல்கிறார்?"

"இது Travel Sickness என்கிறார்"

"இதற்குப் பரிகாரம் இல்லையா?"

"ஏன் இல்லை? பஸ், காரில் பிரயாணம் செய்யும் போது முன்னால் உட்காரச் சொல்கிறார். எதிரில் தெரியும் ரோட்டையே பார்த்துக் கொண்டு இருக்க வேண்டுமாம். வண்டியின் பின்பக்கப் புகை வாந்தி உணர்வை அதிகப்படுத்துமாம். பிரயாணத்துக்கு முன்னர் கொழுப்புச் சத்து அதிகமுள்ள ஆகாரத்தைச் சாப்பிடக் கூடாதாம். அதிகமாகவும் சாப்பிடக் கூடாதாம். அதற்காக வெறும் வயிற்றுடனும் இருக்கக் கூடாதாம். அதன்படி தான் நான் பிரயாணம் செய்கிறேன்."

"பஸ்ஸுக்கே இந்தப்பாடு படுகிறீர்களே... கப்பலாக இருந்தால் என்ன செய்வீர்கள்?"

"அதையும் கேட்டு வைத்திருக்கிறேன். எச்சரிக்கையாக! கப்பலில் போகும் போது முடிந்தால் படுத்துக் கொள்ளலாம். கடலும் வானமும் சந்திக்கும் இடம் - அதாவது தொடுவானம். அந்த இடத்தில் கண்ணை உறுதியாக வைத்திருக்க வேண்டும். இதெல்லாம் கொஞ்சம் உதவியாக இருக்கும். பிரயாணத்துக்கு குறைந்தது ஒரு மணித்தியாலம் முன்பு அதற்கான மாத்திரையை (Avomine or Stemetil) சாப்பிட வேண்டும்"

"பலே! எப்படியெல்லாம் பிரயாணம் பண்ண வேண்டும் என்பதை நன்றாகவே புரிந்து வைத்திருக்கிறீர்கள்."

"எல்லாவற்றையும் விடமுக்கியம். பிரயாணம் சுகமாக இருக்க வேண்டுமானால் சம்சாரத்தை கூட அழைத்துக் கொண்டு வரக் கூடாது. இப்பொழுது கூட அவளை ஏமாற்றிவிட்டு வந்துவிட்டேன். தெரியாமல் கிளம்பி வருவதே ஒரு "ஜாலி" தான் சேர்".

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இராசி பலன்

01.02.2009
(தை 19, ஞாயிற்றுக்கிழமை)
ரேவதி பிற்பகல் 2.28 மணிவரை
ஷஷ்டி பிற்பகல் 3.39 மணிவரை
இராகுகாலம் 5.06- 6.36 மணிவரை
சுபநேரம் 9.36-11 .06 மணிவரை
ஷஷ்டி விரதம்

| | |
|---|---|
| மேடம் | குடும்பக் கவலை, முயற்சி தாமதம், திடீர் பயணம், சோம்பல் நிலை. |
| இடபம் | சயன சுகம், குடும்ப சுகம், தன வருவாய், நண்பர்கள் உதவி. |
| மிதுனம் | நன்கொடை, அதிகாரம், பிறர் உதவி, எடுத்த கருமங்கள் கைகூடும். |
| கடகம் | பிரயாணம், வீண்பயம், தொழில் மந்தநிலை, எதிர்பாராத செலவு. |
| சிங்கம் | வாகன பயம், காரிய தடங்கல், தர்மம், கடன் பிரச்சினை. |
| கன்னி | சென்ற இடத்தில் செல்வாக்கு, மனோதைரியம், முயற்சிகைகூடும், தொழில் நன்மை. |
| துலாம் | போசன நன்மை, உடல் நலம், சத்துரு ஜெயம், அதிக பிரயாசை. |
| விருச்சிகம் | புத்திரரால் கவலை, பணவிரயம், பூர்வ புண்ணிய கருமம், காரிய இடையூறு. |
| தனுசு | முயற்சி தாமதம், சுபசெலவு, மனச் சஞ்சலம், போசன சுகம். |
| மகரம் | காரிய சித்தி, கீர்த்தி, உறவினர் உதவி, பிரயாண நன்மை. |
| கும்பம் | எடுத்த காரியம் தாமதமாகும், தன விரயம், கடின வார்த்தை, மாதர் உதவி. |
| மீனம் | நல்ல முயற்சி, கலந்துரையாடல், சிந்தனை மிகுதி, போசன சுகம். |

வளவன்

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்/ மட்டுவில் கமலாசனி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் செ. பேரின்பநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.


இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக அறவழிப் போராட்டக் குழு செயலாளர் எம். கே. ஜீவகதாஸ் கலந்து கௌ்ளவுள்ளதுடன் ஓய்வு பெற்ற மக்கள் வங்கி உத்தியோகத்தர் திருமதி. ஈஸ்வரி ஜீவகதாஸ் வெற்றியீட்டுபவர்களுக்கு பரிசில்களை வழங்கி கௌரவிக்கவுள்ளார். (ஓ-4)

## பசுமைப் புரட்சிக்காய்!

மானுடனே,
என்னை நினைவிருக்கிறதா?
இருப்பதற்கு சுகம் தந்தேன்!
சுவாசிக்க மொழி தந்தேன்!
உயிர் வளர வழி தந்தேன்!
உண்மைக்காய் உரம் தந்தேன்!
பழமையைப் பரிசளித்தேன்!
பருகிட நீர் தந்தேன்!
பசித்திட பழம் தந்தேன்!
பார்த்திட அழகு தந்தேன்!
பாமரற்கு அடைக்கலமானேன்!
கொடுமைப் புயல் என்னை,
கோரமாய் வதைத்திட,
வீழ்ந்தேன்!!!
இன்று வந்தேன் மீண்டும் உமக்கு,
என்னை அர்ப்பணிக்க விறகாக!
மானுடனே!!
என்னை எரித்திடும் சாம்பல்,
அணைந்திட முன்னே,
நாட்டிடு மரமொன்றை
நீ மகிழ்வாய் வாழ்வதற்கு!

மாவை. நா. கஜேந்திரா (சங்கானை)





# அ ஆ இ ஈ

திரை விமர்சனம்


ஊரில் பெரிய அந்தஸ்தில் இருக்கும் பிரபு பட்டணத்தில் படித்த தனது மகள் மோனிகாவுக்கு சம அந்தஸ்தில் உள்ள ஹனிஃபாவின் மகன் அரவிந்தை திருமணம் செய்யத் தீர்மானிக்கிறார். இரு குடும்பமும் தட்டு மாற்றிக்கொள்கிறது.

இந்நிலையில் அரவிந்தை சந்திக்கும் மோனிகா, பட்டணத்தில் நவ்தீப்பிடம் தான் ஏமாந்த கதையைக் கூறி,களங்கப்பட்ட நான் உங்கள் மனைவியாக முடியாது என்கிறார்.

நிச்சயித்த பெண்ணின் காதலனைத் தேடிப் பட்டணம் செல்லும் அரவிந்த் கையோடு நவ்தீப்பையும் ஊருக்கு அழைத்து வருகிறார். ஒருபுறம் மோனிகா-அரவிந்த் கல்யாண ஏற்பாடுகள் நடக்க, ஊருக்கு வெளியே மோனிகா- நவ்தீப் ஜோடி காதல் செய்கிறது. கூடவே அரவிந்த்-சரண்யா மோகன் (பிரபுவின் தம்பி மகள்) ஜோடி.

இந்தக் காதல் குழப்பம் எப்படி சுபத்தில் முடிகிறது என்பது கதை.

பிரபுவுக்கு ஆயுர்வேத சிகிச்சை அளிப்பதுதான் வேலை. பத்துப்பதினைந்து வெள்ளைக் காரர்கள் சுற்றி வருகிறார்களே தவிர சிகிச்சையைப் பற்றி அவர் சிந்திப்பதாகவே தெரியவில்லை. மகளைப் பற்றி அவர் பேசும் போதெல்லாம் வெள்ளையும் சொள்ளையுமாக பத்துப் பேர் பின்னால் நின்று ஆமாம் சாமி போடுகிறார்கள். வேலை வெட்டி இல்லாத அவுக யாருசாமி?



பிரபுவுக்கு வெள்ளை சொள்ளை என்றால் ஹனிஃபாவை சுற்றி மொட்டையும் பட்டையுமாக பத்துப் பேர் நண்பர்களாம். இருவர் வீட்டுப் பெண்களும் தூங்கி எழும்போதும் கழுத்து நெக்லசும்,காஞ்சிபுரம் பட்டுமாக காட்சியளிக்கிறார்கள். தமிழ்நாட்டில் எந்தக் கிராமம் இப்படி இருக்கிறது?

களம் செயற்கையாக இருக்கையில் கதாபாத்திரம் மட்டும் எப்படி யதார்த்தமாக இருக்கும்? நன்கு இளசுகளும் அடிக்கும் லூட்டிதான் படத்தின் ஒரே ஆறுதல். சரண்யா மோகன் தனது அப்பாவி நடிப்பை இதிலும் ரிப்பீட் செய்திருக்கிறார். இப்படியே போனால் விரைவில் ரிட்டையர்ட் ஆக வேண்டியதுதான்.

ஹனிஃபா தனது லொள்ளு நடிப்பால் ஜில்லு ஏற்றுகிறார். கொடுத்த வேலையை கச்சிதமாக செய்திருக்கும் இன்னொருவர் மனோரமா.நவ்தீப், அரவிந்த், மோனிகா நடிப்பில் முதிர்ச்சி தெரிகிறது.

## தனுஷ் நடிக்கும் 'உன் முகம் பார்த்தேனே'

தனுஷிற்கு ஹிட் படமாக அமைந்த 'திருடா திருடி' படத்தை இயக்கியவர் சுப்ரமணியசிவா. ஒருபடம் ஹிட்டாகி விட்டால், அதே இயக்குநரும் -நாயகனும் உடனே மீண்டும் ஒரு படத்தில் இணைவதென்பது தமிழ் சினிமா வழக்கங் களில் ஒன்று. ஆனால் சுப்ரமணியசிவாவுக்கு மட்டும் இது உடனே நடக்க வில்லை. திருடா திருடிக்கு பிறகு ஜீவா நடித்த 'பொறி' படத்தை இயக்கினார்.தற்போது அமீர் நடிக்கும் 'யோகி' படத்தை இயக்கிவருகிறார். இதற்கிடையே மீண்டும் சுப்ரமணியசிவாவும் தனுஷும் ஒரு படத்தில் இணைகின்றனர். படத்திற்கு 'உன் முகம் பார்த்தேனே' என பெயரிடப்பட்டுள்ளது. மலையாளத்தில் பெரும் வெற்றியடைந்த 'நந்தனம்' படத்தின் ரீமேக் இது. மலையாளத்தில் பிருத்விராஜும் நவ்யாநாயரும் நடித்திருந்தனர்.

## விக்ரமின் தொழில் பக்தி




விக்ரம் எப்போதுமே, படப்பிடிப்பில் நாளைக்கு பேச வேண்டிய வசனங்களை கூட, இரவே வாங்கிக் கொண்டு சென்று விடுகிறார். அதை மனப்பாடம் செய்து காலையில் வந்து, நேரத்தை வீணடிக்காமல், ஒரே டேக்கில்முடித்துக் கொடுத்து விடுகிறார். அது மட்டுமின்றி, டைரக்டர் சொன்ன குறிப்பிட்ட நேரத்தில் ஸ்பொட்டுக்கு ஆஜராவதோடு, அன்றைய காட்சிக்கு தேவையான மேக்கப்,காஸ்டியூம் அணிந்து வந்து, டைரக்டரிடம் ரெடி டேக் சொல்கிறார்.

## ஜோடி சேரும் பரத்-தமன்னா



ஜெயம் கொண்டான் படத்தை இயக்கிய டைரக்டர் கண்ணன், அடுத்து இயக்கவிருக்கும் படம் ராஜா ராணி. ஜப்விமெட் எனும் பெயரில் இந்தியில் வெளியாகிஹிட் ஆன படத்தின் தழுவலான மேற்படிபடத்திற்கு தற்போது ஒருவரை ஒருவர் சந்தித்தோம் எனபெயர் மாற்றம் செய்துள்ளார். பரத்- தமன்னா ஜோடி சேரும் இப் படத்திற்கு பின் தமன்னா கைவசம் அயன், பையா உள்ளிட்ட அரை டசின் படங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## 6 மாதம் ஓய்வெடுக்க பிரபுதேவா முடிவு



வில்லு படத்தை இயக்கி முடித்ததும் தங்கர்பச்சான் இயக்கத்தில் ஒரு படம் உட்பட மேலும் 2 படங்களில் நடிக்க ஒப்புக்கொண்டிருந்தார் பிரபுதேவா. ஆனால் தற்போது அந்தப் படங்களில் நடிக்க மறுத்து ஒதுங்கிக்கொண்ட பிரபுதேவா நடிப்பு மட்டுமல்ல ... இயக்கமும் இப்போதைக்கு வேண்டாம் எனமுடிவெடுத்துள்ளாராம். தற்போதைக்கு தன் இயக்கத்தில் கடைசிக்கட்ட படப்பிடிப்பில் இந்தி போக்கிரியை முடித்த கையோடு மும்பையில்இருந்து திரும்பும் பிரபுதேவா 6 மாதகாலம் அயல் நாடுகளில் ஓய்வெடுக்கும் முடிவில் இருக்கிறாராம்.

## ஏ.ஆர்.முருகதாஸ் -அஜித் இணையும் 50 ஆவது படம்!



'யாரு நாற்காலியை யாரு பிடுங்குவாங்களோ' என்ற அதிகபட்ச அலர்ஜியோடு தான் ஒவ்வொரு நாளையும் ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள் இயக்குநர்கள்.

இதில் லேட்டஸ்டாகசிக்கிக் கொண்டிருக்கிறார் வெங்கட் பிரபு. அஜித்தின் 50 ஆவது படத்தை இயக்க இவர் அட்வான்சே வாங்கிவிட்டார் என்றெல்லாம் பேசப்பட்டது. ஆனால் 'காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் தள்ளிட்டுப் போன' கதையை அஜித்தின் 50ஆவது படத்தை இயக்க முருகதாஸ் வந்துவிடார்! காத்திருந்த வெங்கட்பிரபு கலகலத்து போயிருக்கிறாராம்.

இந்தி கஜினியும் பெரும் ஹிட் ஆன சந்தோஷத்திலிருக்கிறார் ஏ.ஆர்.முருகதாஸ். இதையடுத்து அவருக்கு பொலிவுட்டிலிருந்தே பலமான அழைப்புகள். ஷாருக்கானிலிருந்து சல்மான்கான் வரை இரத்தின கம்பள வரவேற்பு கொடுத்திருக்கிறார்கள். ஆனால், இவர்கள் இருவருக்குமே உடனே முருகதாஸ் படத்தில் நடிக்க இயலாதபடி முந்தைய கமிட்மென்ட்கள்!

இந்த இடைவெளியில் ஒரு தமிழ் படத்தை இயக்கி விடலாம் என்று யோசித்த முருகதாஸ், அஜித்திடம் கதை சொல்லியிருக்கிறாராம். இதில் நடிக்க அஜித் சம்மதித்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

இவர்கள் இருவரும் இணைகிற படம் அஜித்தின் 50ஆவது படமாக இருக்கவேண்டும் என்பதும் முருகதாஸின் விருப்பம். தீனா படத்தின் மூலம் அஜீத்திற்கு 'தல' என்கிற அந்தஸ்தை வழங்கிய முருகதாஸ் கேட்டால் முடியதென்றா சொல்லப் போகிறார் 'தல'?

## கன்னடத்திலும் பிரபு



முழு நேர குணச்சித்திர நடிகர் ஆகிவிட்டார் நடிகர் திலகத்தின் வாரிசான பிரபு. அயன், கந்தசாமி, மலை மலை, எங்க வீட்டுப்பிள்ளை உள்ளிட்ட அரை டசின்படங்களில் தமிழில் அண்ணன், அப்பா கேரக்டர்களில் நடித்து வரும் பிரபு, கன்னட படம் ஒன்றிலும் அப்படியொரு பாத்திரத்தில் நடிக்கவுள் ளார்.பாஸ் என பெயர் சூட்டப்பட்டிருக்கும் அந்தபடத்தில் கன்னட தர்ஷனும் மலையான நவ்யா நாயரும்ஜோடி சேர்க்கிறார்கள்.


## கீர்த்தி சாவ்லா ரொம்ப பிஸி



முதல்வர்கருணாநிதியின் கதை வசனத்தில் நடித்த உளியின் ஓசை படத்திற்கு பின் கீர்த்தி சாவ்லாவிற்கு கிடைத்திருக்கும் பொப்புலாரிட்டி கொஞ்ச நஞ்சமல்ல...! முன்பு, பிறகு படத்திற்காக மலேசியா மட்டும்போய் வந்த அனுபவமுடைய அம்மணி இப்பொழுதெல்லாம் அடிக்கடி அயல் நாடுகளுக்கு பறக்கிறார்.அதுவும் கைவசம் உள்ள பெரிய பட்ஜெட்படங்களின் சூட்டிங்கிற்காக! 1997 படத்திற்காக பிரான்ஸ்சென்றுள்ள கீர்த்தி ,அங்கு ஒரு பாடல் காட்சியில் ஆடி முடித்ததும் ,இத்தாலி பறக்கவிருக்கிறாராம்.

அகராதி படத்திற்காக ஒருபாடல் காட்சியில் பங்கேற்றுவிட்டு, ஆஸ்திரேலியா பறக்க திட்டமிட்டிருக்கிறாராம் கீர்த்தி.

## பெப். 6 இல் நான் கடவுள்



பெரும் எதிர்பார்ப்பைக் கிளப்பியுள்ள பாலாவின் நான் கடவுள் திரைப்படம் எதிர்வரும் பெப்ரவரி 6ஆம் திகதி உலகமெங்கும் ரிலீசாகிறது.

வாசன் விஷுவல் வென்சர்ஸ் சார்பில் சீனிவாசன் தயாரித்துள்ள இந்தப் பிரமாண்டமான படைப்பை பிரமிட் சாய்மீரா நிறுவனம் உலகெங்கும் வெளியிடுகிறது.

கிட்டத்தட்ட 3 ஆண்டுகளாகத் தயாரிப்பிலிருந்து வரும் திரைப் படம் பாலாவின் நான் கடவுள்.

இந்தப் படம் குறித்து பாலா கூறும்போது, முஸ்லிம் மதத்தவரான ஆர்யா' நான் கடவுள்' படத்தில், ஒரு சாது சாமியாக நடிக்கிறார். இந்தப் படத்தில் பெரும்பாலான காட்சிகள், காசியில் படமாக்கப்பட்டது. காசியில் உள்ள சாமியார்கள் அனைவருமே ஜடாமுடியுடன்,ஆழ்ந்த நித்திரையுடனும், தியானத்திலும், அது போக மீதி நேரத்தில் கஞ்சா அடிப்பதையும் வழக்கமாக கொண்டுள்ளனர். இதைத்தான் படத்தில் காட்டியுள்ளேன் என்றார்.



இளையராஜா இசையில் புத்தாண்டு அன்று வெளியான இந்தப் படத்தின் பாடல்கள் இசை ரசிகர்கள் மத்தியில் பெரிதும் பேசப் படுகின்றன.

இப்போது படத்தின் ரிலீஸ் திகதியை அறிவித்துள்ளார் தயாரிப்பாளர் கே.எஸ்.சீனிவாசன்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை பெப்ரவரி 6 ஆம் திகதி உலகம் முழுக்க வெளியாகிறது நான் கடவுள். சென்னை நகரில் மட்டும் 10 திரையரங்குகளில் வெளியாகிறது.

# உறைபனி குளிரையும் பொருட்படுத்தாது

# கனடாவை உலுக்கிய மனிதச்சங்கிலிப் பேரணி

## 80 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பங்கேற்பு

(ரொறன்ரோ)

உடனடிப் போர் நிறுத்தம் கோரியும் பேச்சு வார்த்தை முயற்சிகளுக்கு கனடா முயற்சிக்க வேண்டும் எனக் கோரியும் கனடா, ரொறன் ரோவில் நேற்று முன்தினம் நடைபெற்ற மனித சங்கிலிப் போராட்டம் கனடாவின் நேற் றைய முக்கிய செய்தியாகவும் ஊடகங்களின் பேசுபொருளாகவும் இடம்பிடித்தது. ஆங்கில ஊடகங்கள் தமது கணிப்பின்படி 80ஆயிரம் பேர் கலந்து கொண்டதாகத் தெரிவித்துள்



ளன.

இலங்கை அரசின் காட்டு மிராண்டித் தனத்தையும் தமிழ் மக்கள் மீதான திட்டமிட்ட படுகொலையையும் விவரிக்கும் பதாதைக ளைத் தாங்கிய வண்ணம் பல்லாயிரக் கணக் கான தமிழ் மக்கள் கனடாவின் பொருளாதார மையமான ரொறன்ரோ மத்திய நகர்ப் பகுதியில் உள்ள தெருக்களில் குவிந்திருந்து தமது இனத்திற்காக குரல் கொடுத்திருந்தனர்.

பூச்சியத்திற்குக் கீழே பத்து பாகை செல்சி யஸ் என்ற குளிர்நிலையையும் அதற்குக் கீழான குளிர்காற்று நிலையையும் கொண் டிருந்த நேற்று முன்தினம் பிற்பகல் 12 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை 80 ஆயிரத் துக்கும் அதிகமான மக்கள் கலந்து கொண் டனர்.

முற்றுகைக்குள் அகப்பட்டிருக்கும் தமிழர் களுக்கு நிவாரணம் சென்றடைய கனடிய அரசாங்கம் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் பேச்சுவார்த்தைக்கான தளத்தை அமைப்பதில் காத்திரமாகப் பங்காற்ற வேண் டும் எனவும் தமது கோரிக்கைகளை முன் வைத்தனர். (ஓ-6)

# மும்பைத் தாக்குதல் தொடர்பில் 124 பயங்கரவாதிகள் கைது

## பாகிஸ்தான் அரச அதிகாரி தெரிவிப்பு

(இஸ்லாமாபாத்)

மும்பையில் நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக 124 பயங்கரவாதிகளை பாகிஸ் தான் அரசு கைது செய்துள்ளதாகத் தெரிகிறது.

மும்பை தாக்குதல் தொடர்பாக அந்நாட்டு அதிகாரிகள் விசாரணையை முடித்துள்ள நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

மும்பையில் கடந்த நவம்பர் 26ஆம் திகதி பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நிகழ்த் திய கொடூரத் தாக்குதலில் 180 பேர் உயிரி ழந்தனர்.

இத்தாக்குதலை நடத்திய பாகிஸ்தானிலி ருந்து வந்த பயங்கரவாதிகள் தான் என்ப தற்கு இந்தியா தகுந்த ஆதாரங்களை அளித்தது.

இதன் காரணமாகவும் அமெரிக்கா உள் ளிட்ட நாடுகளின் வற்புறுத்தலை அடுத்தும் பயங்கரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்க பாகிஸ்தான் ஒப்புக்கொண்டது. இதனை யடுத்து இந்தியா கொடுத்த ஆதாரங்களைக் கொண்டு விசாரணை நடத்தப்பட்டது.

இதன் அடிப்படையில் மும்பை சம்பவத் தில் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் 124 பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டுள் ளனர். இவர்களில் சிலர் மீது குற்றச்சாட்டின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்யப்படும் என்று பாகிஸ்தான் அரச அதிகாரி ஒருவர் வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளார்.

மும்பை தாக்குதல் தொடர்பாக இண்டர் நெட் உள்பட தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் பாகிஸ்தானில் இருந்து நடைபெற்ற தகவல் பரிமாற்றத்தின் அடிப்படையில் நடத்தப்பட்ட விசாரணையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிகிறது. மும்பை தாக்குதலை திட்டமிட்டு நடத்திய லஷ்கர் இ-தொய்பா பயங்கரவாதிகளை பிடித்து ஒப் படைக்குமாறு பாகிஸ்தானிடம் இந்தியா கூறியுள்ளது.

முன்னதாக மும்பைத் தாக்குதலைத் தொடர்ந்து ஜமாத் -உத்தவா பயங்கரவாத அமைப்பை பாகிஸ்தான் தடை செய்து அதன் அலுவலகங்களை மூடியது. இந்த அமைப்பைச் சேர்ந்த 120 க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று உள்துறை அமைச் சக அதிகாரி ரஹ்மான் மாலிக் தெரிவித்திருந் தார். (ஓ-6)

# ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான ஊதியம் வழங்குவதை வலியுறுத்தும் சட்டமூலம் கைச்சாத்து

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான ஊதியம் வழங்குவதை வலியுறுத்தும் சட்ட மூலமொன்றில் வியாழக்கிழமை கைச்சாத் திட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக பராக் ஒபாமா தெரிவு செய்யப்பட்ட பின் அவரால் கைச்சாத் திடப்பட்ட முதலாவது சட்ட மூலமாக இது விளங் குகிறது.

இந்த சட்டமூலமானது ஆண்கள் பெண் களுக்கு மட்டுமல்ல அனைத்து ஊழியர் களுக்கு இடையேயான சம்பள முரண்பாட் டுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக ஒபாமா பிர கடனப்படுத்தினார்.



"எமது பொருளாதாரத்தை திறம்பட செய ற்பட வைக்க இந்த சட்ட மூலம் அனைவருக் கும் பிரயோகிக்கப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். எமது தொழில் ஸ்தலங்களில் இரண்டாம் தர பிரஜைகள் என எவரும் இருக் கக்கூடாது. வயது, பால், இனம், சமயம் மற் றும் அங்கவீனம் என்பன தொடர்பில் ஒரு வருக்கு குறைந்த ஊதியம் வழங்கப்படுவது அநீதியானதும் சட்டத்துக்கு புறம்பானதும் மட்டுமல்ல, எமது வர்த்தகங்களுக்கும் தீங்கு விளைவிக்கக் கூடியதாகும்'' என ஒபாமா தெரிவித்தார். (ஓ-6)

# அவுஸ்திரேலியா மெல்பேர்ன் நகரில் மாபெரும் கவனயீர்ப்பு பேரணி

## 4 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பங்கேற்பு

ஈழத்தில் அப்பாவி தமிழர்கள் இலங்கை படைகளால் தொடர்ச்சியாக படு கொலை செய்யப்பட்டு வருவதை கண்டித்தும் அனை த்துலக சமூகம் தனது மௌனத்தை கலைத்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியும் அவுஸ்திரேலியாவின் மெல் பேர்ன் நகரில் நேற்று முன்தினம் மாபெரும் கவனயீர்ப்புப் பேரணி நடைபெற்றது.

புலம்பெயர்ந்து வாழும்ஈழத்தமிழர்கள் மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான போரா ட்டங்களின் ஒரு அங்கமாக மெல்பேர்னில் நேற்று நடை பெற்ற இப்பேரணியில் முன் னர் எப்போதும் காணாத அளவுக்கு பெருந் திரளான மக்கள்கலந்து கொண்டனர்.

சுமார்4ஆயிரத்துக்கும் அதிகமான மக் கள் கலந்து கொண்டஇக்கவனயீர்ப்பு பேரணி மெல்பேர்ன் நகரை பொறுத்தவரை மிக முக்கியமானதாக கருதப்பட்டது.

பலவருடங்களுக்கு பின்னர் 45பாகை செல்சியஸ்வெப்பநிலை சுமார் நான்கு நாட்க ளுக்கு மேல்நீடிக்கும் கொதி காலநிலையில் மெல்பேர்ன் நகரமே எரிந்து கொண்டிருப் பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இடம் பெற்ற கவனயீர்ப்பு பேரணி கடும் வெப்ப நிலையில் மிகவும் உணர்வு பூர்வமாக நடை பெற்று முடிந்திருப்பது மிகவும் கவனிக்கத் தக்கது.

அவுஸ்திரேலிய இளைஞர் அமைப்பி னால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்பேரணி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற் பகல் 2.30 நிமிடமளவில் மெல்பேர்ன் நகரின் மத்தியில் அமைந்துள்ள திறைசேரி பூங்காவில் இருந்து தொடங்கியது.

அங்கிருந்து விக்டோரியா மாநில நாடா ளுமன்ற கட்டடத்தின் முன்பாக சென்ற டைந்த பின்னர், பிரதான நிகழ்வுகள் நடை பெற்றன. தமிழ் இன உணர்வாளர்கள் பலர் அங்கு உரையாற்றிய பின்னர்மாநில நாடா ளுமன்ற உறுப்பினர் ஒருவரும் வருகை தந்து உரையாற்றினர்.

இந்த வெப்ப நாளினை பொருட்படுத் தாது தமது இனத்துக்காக ஒன்று திரண்டு குரல் எழுப்பும் மக்களின் போராட்டத்துக்கு அவர் வாழ்த்து தெரிவித்தார். சிறுபான்மை இனம் ஒன்று தொடர்ச்சியான அடக்கு முறை க்கு முகம்கொடுப்பது கவலை அளிப்பதா கவும் அவர் கூறினார்.

அவரது பேச்சின்நிறைவின் பின்னர் அவுஸ் திரேலிய அரசுக்கான மனு ஒன்று தமிழ் இளைஞர் அமைப்பினால் அவரிடம் கைய ளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஈழத்தமிழர்களின் விடிவுக்



காக தீக்குளித்து தன்னுயிரை தியாகம் செய்த வீரத் தமிழ்மகன் முத்துக்குமாருக்கு வணக் கம் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்ற கட்டடத்துக்கு முன்பாக நிகழ்வுகளை நிறைவு செய்து கொண்டு கவன யீர்ப்பு பேரணி தனதுபயணத்தை தொடங் கியது.

பேரணி நடைபாதையோரம் மாத்திரம் நகரலாம் என்று அனுமதியளித்திருந்த அவுஸ் திரேலிய காவல்துறை, பெருந்திரளாக கூடிய மக்கள் வசதியாக நடந்து செல்வதற்கு ஏது வாக, ஒரு கட்டத்தின் பிறகு வீதியில் நடந்து செல்வதற்கு அனுமதியளித்திருந்தனர்.


நகரின் மத்திய பகுதியை கடக்கும்போது, இலங்கை அரசே கொலைகளை நிறுத்து, மக்களை கொல்வதை நிறுத்து போன்ற முழக் கங்களை பேரணியில் கலந்து கொண்டவர் கள் எழுப்பினர்.

பேரணி நகர்வதற்கு மிகவும் உதவியாக வும் உறுதுணையாகவும் விக்டோரியாவில் மாநில காவல் துறை பணியாற்றிய அதே வேளை, பேரணியில்கலந்து கொண்டவர்க ளின் தாகம் தீர்ப்பதற்கு அவுஸ்திரேலிய தமிழ் அமைப்புகள் தொடச்சியாக நீராகாரம் வழங் கிய வண்ணம் இருந்தனர்.

பேரணியில் கலந்து ஒரு சிலர் மயக்க முற்று வீழ்ந்தனர். அவர்களுக்குரிய முதலுத விகளை ஏற்கனவே திட்டமிட்டபடி இளைஞர் அமைப்பினர் வழங்கினர்.


அலக்சாண்டர் பூங்காவை பேரணி சென்றடைந்த பின்னர், அங்கு பேச்சுக்கள் இடம்பெற்றன. புலம் பெயர்ந்து வாழும் மக் கள் இன்றைய வரலாற்று கால கட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து கூறப்பட்டது தமிழ் மக்கள் உடனடியாக மேற் கொள்ள வேண்டிய வேலைத் திட்டங்கள் குறித் தும் பேசப்பட்டது. (ஓ-6)

# குவாண்டநாமோ சிறை விவகாரம்; ஒபாமா மீது பிடல் காஸ்ட்ரோ புகார்



(ஹவானா)

கியூபாவில் உள்ள குவாண்ட நாமோ இராணுவத்தள விவகாரம் தொடர்பாக கியூபாவின் முன்னாள் அதிபர் ஃபிடல் காஸ்ட்ரோ (82) அமெரிக்க அதிபர் மீது புகார் தெரி வித்துள்ளார்.




அதிபர் பதவிக்கு போட்டியிட தொடங்கியதுமுதல் ஒபாமாவுக்கு ஆதரவு தெரிவித்து வந்த ஃபிடல் காஸ்ட்ரோ, குவாண்டநாமோ விவகாரத்தில் அவரை கடுமையாகச் சாடியுள்ளார்.

கியூபாவின் கிழக்குப் பகுதியில் உள்ள குவாண்டநாமோ பகுதியை கடந்த 100 ஆண்டு களுக்கு முன் அமெரிக்கா கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டது. 45 சதுர மைல் பரப்புடைய அந்த இடத்தை அமெரிக்கா தனது இராணுவ தளமாக மாற்றிக்கொண்டது. பின்னர் போர் கைதிகளையும், பயங்கரவாதத்தில் ஈடுபடுவோரையும் அடைப்பதற்கான சிறையாக மாற்றிக் கொண்டது. அங்கு அடைக்கப்பட்டுள்ள கைதிகள் கடும் சித்திரவதைக்கு ஆளாவதாக புகார் எழுந்துள்ளது.

இந்நிலையில் அதிபராகத் தேர்வு செய்யப்பட்ட ஒபாமா, குவாண்டநாமோ சிறைக் கைதி களிடம் நடத்தப்படும் விசாரணையை உடனடியாக நிறுத்துமாறு உத்தரவிட்டார். இந்நிலையில் குவாண்டநாமோ இராணுவ தளத்தை தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று காஸ்ட்ரோ எழுதிய கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டுரை இணையதளத்தில் வியாழக் கிழமை வெளியானது. அதில் அவர் கியூபா அரசாங்கம் எடுக்கும் முடிவுகளில் அமெரிக்கா தலையிடுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும். அதிபர் ஒபாமாவின் கொள்கை முடிவுகள் கேள்விக்குரியதாக உள்ளன என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன் குவாண்டநாமோவை கியூபாவிடம் திரும்பி அளிக்கவேண்டும் அப்படி செய் யவில்லையெனில் அது சர்வதேச சட்டத்தை புறக்கணிக்கும் செயலாகும்.

ஒரு சிறிய நாடு மீது அமெரிக்கா தனது ஆதிக்கத்தை செலுத்துவதையே இது காட்டுகிறது. கியூபா மக்களின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்து எந்தவித நிபந்தனையுமின்றி, குவாண் டநாமோவை திருப்பி ஒப்படைக்கவேண்டும் என்று கூறியுள்ளார். மேலும் இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்கா செயல்படுவதையும் அவர் கடுமையாகச் சாடியுள்ளார். (ஓ-6)



Lifeline

# மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

# பாதுகாப்பு தருமா யுத்த சூனிய பிரதேசம்?

வன்னியில் நிலவும் அசாதாரண சூழ் நிலைகளால் மக்கள்அடர்த்தியாக ஒரேஇடத்தில் வாழ வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். தற்பொழுது 4 இலட்சத்து 70ஆயிரம் மக்கள் அங்கு அவ்வாறு வாழ வேண்டியுள்ளதாக முல்லைத் தீவு அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார். அரசாங்கம் சில பகுதிகளை பாதுகாப்பு பகுதிகள் என்று அறிவித்து மக்களை அங்கு செல்லுமாறு கோரியுள்ளது. அதே வேளை வைத்தியசாலைகளும் கூட இடம்பெயர்ந்த வண்ணமே உள்ளன.

யுத்தப் பிரதேசங்களில் மக்களின் நன்மை கருதி பாதுகாப்பு பிரதேசங்கள் அறிவிக்கப்படுவது வழக்கம். இலங்கை அரசாங்கமும் வன்னியிலுள்ள தேவிபுரம், உடையார்கட்டு வடக்கு, சுதந்திரபுரம், சுதந்திரபுரம் கொலனி மற்றும் சுதந்திரபுரம் மத்தி என்பனவற்றை அவ்வாறு யுத்த சூனியப் பிரதேசமாக அறிவித்துள்ளது. அப்பிரதேசங்களில் இலங்கை இராணுவம் தாக்குதலை நடத்தாது என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார உறுதியாகத் தெரிவித்திருக்கின்றார்.

35 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு பாதுகாப்பு வலயமாக அரசாங்கத்தால் முல்லைத்தீவில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்த பிரதேசத்தின் மீது வான்வெளியாகவோ அல்லது ஏனைய விதத்திலோ இராணுவத்தினர் தாக்கு தல் நடத்த மாட்டார்கள்.

எனவே அங்கு மக்கள் பாதுகாப்பாக தங்கியிருக்க முடியும் என்பதை நான் உறுதியோடு கூறிக்கொள்ள விரும்புகின்றேன் என பிரிகேடியர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கிராம சேவகர்களின் ஊடாக அரசாங்கத்தின் அறிவிப்பு மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அரச அதிபரின் நிர்வாகமும் இடம் பெயர்வதாகவும் முல்லைத்தீவு அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இந்நிலையில் எவ்வாறான சூழ்நிலை நிலவினாலும் வன்னிக்கான உணவு வாகனத் தொடரணியை அனுப்பி வைப்பதில் ஐக்கியநாடுகள் சபை முனைப்புடன் செயற்படும் என அவ்வமை



கிளிநொச்சி தர்மபுரத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள்.

ப்பின் பதில் பேச்சாளர் ஜேம்ஸ் எல்டர் தெரிவித்தார்.

ஐக்கியநாடுகள் சபையானது வன்னியில் வாழும் மக்களுக்கு வேண்டிய அனைத்து விதமான உதவிகளையும் வழங்குவதில் அதீத அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகின்றது. அம் மக்கள் ஐக்கியநாடுகளின் உணவு மற்றும் ஏனைய மனிதாபிமான உதவிகளை நம்பியே வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கான எல்லாவிதமான உதவிகளையும் தொடர்ச்சியாக வழங்குவதில் நாங்கள் அக்கறை கொண்டிருக்கின்றோம். அதேவேளை வன்னியிலுள்ள ஐக்கியநாடுகளின் உள்ளூர் பணியாளர்களும் அவர்களது குடும்பத்தினரும் அங்கிருந்து சுயாதீனமாக வெளியேறுவதற்கான அனுமதியை விடுதலைப் புலிகள் வழங்க வேண்டும் என்பது தொடர்பில் அவர்களுடன் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளில் நாங்கள் ஈடுபட்டு வருகின்றோம் எனவும் ஜேம்ஸ் எல்டர் தெரிவித்தார்.

கடந்த சில வாரங்களாக அண்ணளவாக இரண்டாயிரம் பேர் வன்னியிலிருந்து வவுனியாவிற்கு இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் தங்களால் சுமக்கக்கூடிய அளவு பொருட்களை சுமந்து வந்திருக்கின்றனர். அங்கிருந்து வந்துள்ள சிலர் தாங்கள் கடந்த 21 ஆம் திகதி ஒட்டி சுட்டானிலிருந்து காட்டுப்பாதை வழியாக வந்ததாகவும் ஒருவர் வெள்ளைக் கொடி பிடித்து வர, அவருடன்மற்ற அனைவரும் கையை உயர்த்திக்கொண்டு நடந்து வந்ததாகவும், மூன்று நாட்கள் காட்டில் பிஸ்கட்டுகளை சாப்பிட்டுக் கொண்டு இருந்ததாகவும் தெரிவித்தனர்.

வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்திற்கு மக்கள் இடம் பெயர்வது போல் மன்னாருக்கும் ஆயிரத்து 220 பேர் இடம் பெயர்ந்துள்ளனர். வணக்கத்துக்குரிய ஆயர் இராயப்பு யோசப் அடிகளாரின் தலைமையில் இயங்கும் வாழ்வோதயம் அமைப்பு இடம்பெயர் மக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி வருகின்றது. அத்துடன் இடம் பெயர்ந்தவர்கள் தொடர்பில் அரசாங்கத்துடன் பல விடயங்கள் குறித்து தொடர்ச்சியாக கலந்துரையாடி வருவதாக அவ் வமைப்பின் பணிப்பாளர் வணக்கத்திற்குரிய பெப்பி சோசை தெரிவித்தார்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள மக்கள் வைத்தியசாலை , வங்கி, பாடசாலை வசதிகள் இன்றியும் ஆலயம் செல்லும் கடமைகளைக் கூட நிறைவேற்ற இயலாமல் இருக்கின்றனர் என்றும் கடந்த வாரம் மன்னார் மாவட்ட கொமாண்டரோடு நடைபெற்ற கூட்டத்தில் தாங்கள் கலந்துரையாடியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். மீண்டும் மாபெரும் இடம்பெயர்விற்கு உள்ளாகியுள்ள மக்களுக்குத் தேவையான உணவு உறைவிடத்தை வழங்க முல்லைத்தீவிலுள்ள அதிகாரிகள் முனைப்புடன் செயல்பட வேண்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். எனினும் இடம்பெயர்வுகளினால் இழப்புகளை சந்தித்துள்ள இம்மக்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பது அரசாங்கத்தினது கடமையாகும்.

**உங்கள்எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்**

**மீண்டும் வாழ்வோம்**

**தொடர்பான உங்கள்**
**மேலான எண்ணங்களையும்**
**படைப்புக்களையும் எதிர்பார்க்கிறோம்**
**நீங்கள் ஓவியம் வரையும் ஆற்றல் மிக்கவர் எனில்**
**உங்கள் அனுபவங்களை சித்தரிக்கும் ஓவியங்களை**
**வரைந்து எமக்கு அனுப்பி வையுங்கள்**
**அவற்றை மீண்டும் வாழ்வோம்**
**பகுதியில் பிரசுரிக்க காத்திருக்கிறோம்.**

த.பெ.இல.1039 கொழும்பு
தொ.பே. -0774952242
மின்னஞ்சல்-info@lifeline srilanka.com

# "தெருவோரங்களிலும் வீதிகளிலும் சடலங்கள் கிடப்பதாக தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன"

## கிளிநொச்சி மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி தங்கமுத்து சத்தியமூர்த்தி

அண்மையில் முல்லைத்தீவு உடையார் கட்டு பகுதியில் இடம்பெற்ற தாக்குதலின் அதிகளவான மக்கள் உயிரிழப்புகளை சந்தித்துள்ள நிலையில் அங்குள்ள நிலைமை குறித்து மேலதிகத் தகவல்களை அறிந்துகொள்ளும் நோக்கில் கிளிநொச்சி மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி சத்தியமூர்த்தி அவர்களை கடந்த 24 ஆம் திகதி நேர்கண்டோம்.

**உடையார்கட்டில் இடம்பெற்ற தாக்குதலில் உயிரிழந்தவர்கள் தொடர்பில் உத்தியோக பூர்வ தகவல்கள் ஏதேனும் இருக்கின்றதா?**


நான் கடமை புரிகின்ற வைத்தியசாலை மற்றும் நட்டாங்கண்டல் வைத்தியசாலையில் மாத்திரம் தற்சமயம் 30 இறந்த உடல்கள் கொண்டுவரப்பட்டன. இன்னும் சில உடல் களை உறவினர்கள் வந்து எடுத்துச் செல்லவில்லை. இதைவிட தெரு ஓரங்கிலும், வீதிகளிலும் சடலங்கள் கிடப்பதாக தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. நான் நேற்று மூங்கிலாறு சென்று வரும் போதும் ஒரு உளவு இயந்திரத்தித்திற்கு அருகில் மூன்று நான்கு சடலங்கள் எரிந்த நிலையில் காணப்பட்டன. சில உடல்களை உறவினர்கள் ஆங்காங்கே புதைத்து விட்டதாகவும் சொல்லப்படுகின்றது. இத்தகைய சூழ்நிலையில் இறுதிக் கிரியைகள் செய்ய இயலாது. எனவே ஆங்காங்கே சட லங்கள் புதைக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. வைத்தியசாலையிலுள்ள சடலங்களை எடுத்துச் செல்வதற்கான வசதிகள் இல்லை. எனவே சடலங்களை பொலித்தீன் பைகளில் சுற்றி மோட்டார் வண்டிகளில் தான் எடுத்துச் செல்கின்றார்கள். மக்கள் பதற்ற சூழ்நிலையின் மத்தியில் தான் வாழ்ந்து வருகின்றார்கள். எங் களுடைய இரண்டு வைத்தியசாலைகளில் மாத்திரம் 76க்கும் மேற்பட்டோர் காயமடைந்து அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்.

**அரச கட்டுப்பாடற்ற பகுதியில் சுமார் எத்தனை வைத்தியசாலைகள் தற்சமயம் இயங்கி வருகின்றன?**

புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம், உடையார் கட்டு, நட்டாங்கண்டல், சுதந்திரபுரம், மூங்கிலாறு என ஆறு வைத்தியாசாலைகளும் மேலும் நான் ஐகந்து இடங்களில் வெளி நோயாளர் பிரிவு மாத்திரம் கொண்ட வைத்திய நிலையங்களும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. பல ஊழியர்கள் கடமைக்கு வந்திருந்தாலும் இன்னும் சிலர் வராத நிலை காணப்படுகிறது. அநேகமான ஊழியர்களும் பொதுமக்களும் தமது இரவுப் பொழுதுகளை பங்கருக்கடியிலே கழிக்க வேண்டியுள்ளது. இருப்பினும் தமது கடமையைச் செய்வதற்காக சில ஊழியர்கள் வந்துள்ளார்கள். இதேவேளை தற்சமயம் பெய்த கடும் மழை காரணமாக மக்கள் தங்கியுள்ள இடங்களில் வெள்ள நீர் உட்புகுந்துள்ளது. எனவே மக்கள் பதுங்கு குழியிலும் பாதுகாப்பைத் தேடிக்கொள்ள முடியாது. ஷெல் தாக்குதல் எங்கும் எப்போதும் இடம் பெறலாம். எனவே மக்கள் உயிராபத்தை எதிர் நோக்கியுள்ளனர்.

**அரசாங்கம் அறிவித்துள்ள பாதுகாப்பு வலயத்தினுள்தான் மக்கள் அனைவரும் இருக்கின்றார்களா? அல்லது அதற்கு வெளியிலும் இருக்கின்றார்களா?**

பாதுகாப்பு வலயத்தினுள்தான் அநேகமாக வைத்தியசாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. பாதுகாப்பு வலயத்தில்தான் ஏனைய பிரதேசங்களைவிட அதிக தாக்குதல் நடைபெறுவதால் அநேகமான மக்கள் அரசு அறிவித்திருந்த பாதுகாப்பு பிரதேசத்திலிருந்து வெளியேறி பாதுகாப்பு பிரதேசமாக அறிவிக்கப்படாத பிரதேசங்களுக்கு மீளச் சென்றுள்ளார்கள். தற்போது ஏற்பட்டுள்ள பல உயிரிழப்புகளும் பாது



முல்லைத்தீவு உடையாட்கட்டுப் பகுதியில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் காயமடைந்த பெண்ணொருவரை படத்தில் காணலாம்.

காப்பு வலயத்தினுள் நடைபெற்ற தாக்குதல்களினால் ஏற்பட்டதுதான். பெரும்பாலானோர் உடுத்தியிருந்த உடையுடனும் கையில் எவ்வித பொருட்களுமின்றி ஓடிவிட்டார்கள். ஷெல் விழுந்த திசைக்கு எதிராக வேலிகளுக்கூடாக புகுந்து தென்னந் தோட்டங்கள் வயல்களைக் கடந்து நீர் நிலைகளைக் கடந்து அடுத்த பாதுகாப்பான பிரதேசமென அவர்கள் நினைக்கும் பிரதேசத்தை நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்றார்கள்.

**மக்களுக்கான உணவுத் தேவைகள் எவ்வாறு பூர்த்தி செய்யப்படுகின்றது?**

நிவாரணப் பணிகள் அனைத்தும் முடங் கிப் போயிருக்கின்றன. உணவு விநியோகம் நடைபெறும் பகுதியிலும் உணவு விநியோகம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது ஷெல் விழுந்து வெடித்தது. அவ்வாறிருந்தாலும் ஒரு சில இடங்களில் உணவு விநியோகம் நடைபெற்றது. பெரும்பாலான கடைகள் மூடிய நிலையிலேயே காணப்படுகின்றன. இன்று ஷெல் தாக்குதல் குறைந்தும் மழை குறைந்தும் காணப்படுவதால் ஒரு சிலர் வீதிகளில் நடமாடுவதை காண முடிகிறது.

**இந்தத் தாக்குதல்களை அடுத்து தாங்கள் செஞ்சிலுவை சங்கத்தை தொடர்பு கொண்டதாக அறிகிறோம். •அதன் பிரதிபலிப்பு குறித்துக் கூற முடியுமா?**

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கொழும்பு மற்றும் வவுனியா கிளைகளுக்கு உடனடியாக தாக்குதல் குறித்து தகவல்கள் அனுப்பியிருந்தோம். ஏனெனில் வைத்தியசாலை வளாகத்தினுள்ளும் ஷெல் விழுந்து பத்திற்கும் அதிகமானோர் காயமடைந்தனர். அத்தோடு மக்கள் செறிவாக இருந்த பகுதி களிலும் ஷெல் தாக்குதல் இடம்பெற்றதால் காயங்களுடனும் இறந்த நிலையிலும் பலரை வைத்தியசாலைக்கு கொண்டு வந்ததால் உடனே அதுகுறித்து அவர்களுக்கு அறிவித்திருந்தேன். மேலும் சுகாதார அமைச்சிற்கும் தகவல் தெரிவித்தேன். புதுக்குடியிருப்பு,உடையார்கட்டு பகுதிகளில் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் இயங்கி வந்தது. ஆனால் அவர்களும் உடையார்கட்டு அலுவலகத்தை காலி செய்து புதுக்குடியிருப்பு நோக்கி ஓடிவிட்டார்கள். அங்கு வெளிநாட்டு மற்றும் உள்ளூர் ஊழியர்கள் கடமையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

**ஷெல்தாக்குதல் எந்தத் திசையிலிருந்து வருகின்றது? எந்தத் தரப்பிடமிருந்து வருகின்றது? என்பதை அநுமானிக்க முடிகின்றதா?**

இந்த ஷெல்தாக்குதலானது பாதுகாப்புப் படையினர் இருக்கின்ற திசையிலிருந்து உடையார்கட்டை நோக்கி வருகின்றது. இவ் விடயம் இங்கிருக்கின்ற 4 இலட்சம் மக்களுக்கும் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினருக்கும் தெட்டத் தெளிவாகத் தெரியும்.

**மீண்டும் வாழ்வோம்**

"மீண்டும் வாழ்வோம்" திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளினால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள்குடியேறி உள்ள வர்களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்து பட்ட மனி தாபிமான செயற்றிட்ட அமைப் புக்களின் ஓர் அங்கமாகும்.



மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது சூரியன் எவ்.எம். வானொலியூடாக சனிக்கிழமை களில் காலை 6 மணிமுதல் 8 மணி வரையும் கிழக்கு மாகாணத்தில் பிறை எவ்.எம். வானொலியூடாக (F.M. 102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் பி.ப. 1.30 மணி முதல் 2 மணி வரையும் புத்தளப் பிரதேசத்தின் அநூர் எவ்.எம் ஊடாக ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 6.45 முதல் 7.15 மணி வரையும் எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை (WWW.Internews. lk.Radio. Voices of peace.lk) என்ற இணையத்தளத்திலும் கேட்கலாம்.

# வெளிநாடுகளுக்கான இராணுவ உதவி குறித்து

# மத்திய அரசு மாநில அரசுகளுடன் கலந்தாலோசிப்பதில்லை

## ஜெயலலிதாவின் கேள்விக்கு முதலமைச்சர் கருணாநிதி பதில்

1991ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் காங்கரஸ் கட்சியுடன் கூட்டணி வைத்திருந்த அ.தி.மு.க பிரசாரம்செய்வதற்காக சென்னை வந்த ராஜீவ் காந்தியை வரவேற்க எவரையுமே



அனுப்பவில்லை. இதன் அர்த்தம் ராஜீவின் படுகொலை முன்கூட்டியே அ.தி.மு.கவுக்கு தெரிந்துள்ளது என்று தானே கொள்ள வேண்டும்.அன்றே இந்த சந்தேகத்தை சுப்பிரமணிய சுவாமி எழுப்பியிருந்தார் என்று தமிழக முதலமைச்சர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதாவின் கேள்விகளுக்கு கருணாநிதி விடுத்துள்ள பதில்களின் விபரம் வருமாறு

**கேள்வி:- தமிழ் மண்ணில் ராஜீவ் காந்தி கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டதை கருணாநிதி ஆதரிக்கிறாரா? அப்படியானால் ராஜீவ் காந்தியின் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொண்டு அரசின் முதலமைச்சராக பதவியில் ஒட்டிக்கொண்டிருப்பது கருணா நிதிக்கு வெட்கமாக இல்லையா?**

கருணாநிதி:-1991 பொதுத் தேர்தல் காலத்தில் காங்கிரஸ் அ.தி.மு.க உள்ளிட்ட கூட்டணி கட்சிகளுக்கு தேர்தல் பிரசாரம் செய்வதற்காகத் தான்ராஜீவ் காந்தி சென்னைக்கு வந்தார்.

அப்போது அந்த கூட்டணிக் கட்சிகளின் தலைவருவம், இந்தியப் பிரதமருமான ராஜீவ் காந்தியை வரவேற்க அந்த கூட்டணியிலே உள்ள கட்சிகளில் ஒன்றான அ.தி.மு.க சார்பில் யாருமே சென்னை விமான நிலையத்துக்குப் போகவில்லை. அது உண்மை என்றால் ராஜீவின் படுகொலை முன் கூட்டியே அ.தி.மு.கவினருக்கு தெரிந்திருக்கிறது என்று தானே நினைக்க வேண்டியுள்ளது இது பற்றிய சந்தேகத்தை சுப்பிரமணிய சுாவமி அப்போதே எழுப்பினார்.

அரசின் முதல் அமைச்சராக பதவியில் ஒட்டிக் கொண்டிருப்பது எனக்கு வெட்கமாக இல்லையா? என்று ஜெயலலிதா கேட்டுள்ளார் சிறுபான்மை சமூக மக்களின் முன்னேற்றத்தையும் கருத்திலே கொண்டு ஓர் அரசு நடத்துவதில் வெட்கம் என்ன வந்து கிடக்கிறது. மாறாக சிறுபான்மையின் மக்களுக்கு தொண்டாற்றுவதைப் பெருமையாக கருதுபவன் நான்.

**கேள்வி:- இலங்கை தமிழர்களுக்கு எதிராக இலங்கை இராணுவத்தினரால் பயன்படுத்தப்படும் ஆயுதங்களை அவர்களுக்கு இந்தியஅரசு கொடுத்த போது கருணாநிதி என்ன செய்து கொண்டிருந்தார். எதிர்ப்பை தெரிவித்து அவர் பதவி விலகியிருக்கலாமே?**

கருணாநிதி:-மத்திய அரசின் சார்பில் வெளிநாடுகளுக்கு இராணுவ உதவிகள் அனுப்புவதைப் பற்றி மத்திய அமைச்சர்களுடனோ மாநில அரசுகளுடனோ மத்திய அரசு கலந்து பேசி செய்வதில்லை என்ற சிறு விடயம் கூட பத்தாண்டு காலம் முதலமைச்சராக இருந்த ஒருவருக்கு தெரியாமல் இருப்பது வேதனை தான். பாதுகாப்பு போன்ற துறைகளின் நடவடிக்கைகளும் வெளிப்படையாக அனைவருக்கும் தெரிய நியாயமில்லை. இன்னும் சொல்லப் போனால்மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆனாலும் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே. அந்தோனி ஆனாலும் இலங்க்கைக்கு இந்திய அரசு ஆயுதங்களை அனுப்பியதாகத் தெரிவிக்கவில்லை. மாறாக அதை மறுத்தும் இருக்கிறார்கள்.

ஆனால் ஜெயலலிதா என்னைப் பார்த்து என்ன செய்து கொண்டிருந்தேன் என்கிறார். ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த போது தான் இலங்கைக்கு மத்தியஅரசு மூலம் இராணுவ உதவிகள் செய்யப் பட்டதாக சொல்லப்படுகிறது.


அப்போது இவர் முதலமைச்சராக இருந்து கொண்டு என்ன செய்துகொண்டிருந்தார் என்று நான் திருப்பிக் கேட்க மாட்டேன். காரணம் இராணுவ உதவியெல்லாம் மாநில அரசுகளைக் கேட்டு கொண்டு செய்யப்படுவதில்லை என்பதை நான் அறிவேன்.

**கேள்வி :- இலங்கை ராணுவவீரர்களுக்கு இந்திய அரசு சிறப்புப் பயிற்சி அளித்தபோது கருணாநிதி என்ன செய்து கொண்டிருந்தார் என்ற 'ஜே' கேள்விக்கு என்ன பதில்**

கருணாநிதி:-இரண்டாவது கேள்விக்கு அளித்துள்ள பதில் தான் இந்த கேள்விக்கும்! நான் என்ன செய்து கொண்டிருந்தேன் என்று திரும்பத் திரும்பஜெயலலிதா கேட்கிறார். கொட நாடு எஸ்டேட்டில் மாதக்கணக்கில் ஓய்வு, சிறுதாவூர்பங்களாவில் வாரக் கணக்கில் ஓய்வு,பையனூர் மாளிகையிலே நாட்கணக்கிலே ஓய்வு, இதற்கிடையே ஐதராபாத் திராட்சை தோட்டத்திலே ஓய்வு என்று நான் எப்போது ஓய்வு எடுத்துக்கொண்டிருந்ததில்லை. நான் என்ன செய்து கொண்டிருந்தேன் என்று கேட்பதற்கு அவருக்கு எவ்வித அருகதையும் எப்போதும் கிடையாது.

ஏனென்றால் நான் உழைக்கப் பிறந்த பிறவி. அவர்ஓய்வெடுக்கப் பிறந்த உல்லாசி!

(ஓ-6)




# இலங்கையில் அரசியல் தீர்வுகாண மத்திய அரசு தொடர்ந்து பாடுபடும்

## பிரணாப் முகர்ஜி கருணாநிதிக்கு கடிதம்

(சென்னை)

இலங்கையில் அமைதி ஏற்பட டில்லி பாடுபடும் என்று தமிழக முதல்வர் கருணா நிதிக்கு மத்திய வெளியுறுவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி கடிதம் எழுதியுள்ளார்.




இலங்கையில் அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட அரசியல் தீர்வு காண உரிய நடவடிக்கையை மத்திய அரசு தொடர்ந்து எடுக்கும் என்றும் அந்த கடிதத்தில் பிரணாப் குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் கருணாநிதிக்கு வெள்ளிக்கிழமை எழுதியுள்ள கடிதத்தில் இதை அவர் தெரிவித்துள்ளார். ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த அந்தக் கடிதத்தை அவை முனைவரும் நிதி அமைச்சருமான அன்பழகன் பேரவையில் படித்துக் காண்பித்தார்.

அக்கடிதத்தில் இலங்கை அதிபர் ராஜபக்ஷவுடன் நான் கடந்த ஜனவரி 27 ஆம் திகதி நடத்திய பேச்சுக் குறித்து ஏற்கனவே உங்களுக்குக் கடிதம் எழுதியுள்ளேன்.

போர்ப் பகுதியில் உள்ள தமிழர்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல வசதியாக 48 மணி நேர போர் நிறுத்த அறிவிப்பை இலங்கை அதிபர் ராஜபக்ஷ வெளியிட்டுள்ளார். நானும் (பிரணாப் முகர்ஜி), மத்திய அரசும் கோரியதற்கு இணங்க தமிழர்களின் பாதுகாப்பை முன்னிட்டு இந்த அறிவிப்பை அதிபர் வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் அமைதி திரும்பும் வகையில் அதிகாரப் பகிர்வு உட்பட அரசியல் தீர்வு காண மத்திய அரசு தொடர்ந்து பாடுபடும் என அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது என்றார் அமைச்சர் அன்பழகன்.

(ஓ-6)

இணுவில்

திருவருள்மிகு ஸ்ரீ பரராஜசேகர விநாயகப் பெருமான் ஆலய

மஹா கும்பாபிஷேகம்

# பிரபல நகைச்சுவை நடிகர் நாகேஷ் காலமானார்



பழம்பெரும் நகைச்சுவை நடிகர் நாகேஷ் சென்னையில் நேற்று காலை காலமானார். கடந்த சில நாட்களாக



# இலங்கையில் தமிழர் 57

### ஆரியரும் திராவிடரும்

#### தென்திராவிடம் இலங்கைக்குப் பரவுதல்

தென்திராவிடப் பிரிவைச் சேர்ந்த மொழிகள் தென்னிந்திய மாநிலங்களாகிய கர்நாடகம், தமிழ்நாடு மற்றும் கேரளம் முழுவதும் பரவின. அதன்பின், தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு இம் மொழிகள் பரவுவது தவிர்க்கமுடியாத ஒரு நிகழ்ச்சி ஆகியது. தென்திராவிட மொழிகளுள் ஒன்றோ பலவோ இலங்கைக்குப் பரவியிருக்கும். இந் நிகழ்ச்சி ஆதி இரும்புக் காலத்துக்கு முன்னரே நடந்ததா அல்லது ஆதி இரும்புக் காலத்திலேதான் நடந்ததா என்பதை உறுதியுடன் கூறமுடியாது.

இடைக்கற்கால மக்கள் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கும் இலங்கையிலிருந்து தென்னிந்தியாவுக்கும் தடையின்றி நாடோடிகளாகத் திரிந்தபடியால், தென்னிந்தியாவில் பேசப்பட்ட தென் திராவிட மொழி இலங்கைக்கும் பரவுவதற்கு வாய்ப்பு இருந்தது. இது எவ்வாறாயினும், ஆதி இரும்புக் காலப் பண்பாடு தென்னிந்தியாவிலிருந்து பரவியபோது கூடவே தென் திராவிட மொழிகளின் பரம்பல் ஏற்பட்டிருக்கும்.

வரலாற்றுத் தொடக்க காலமாகிய, ஆ.இ. காலத்தில் தென் திராவிட மொழிகளின் பரம்பலும் இந்து ஆரிய பிராகிருத மொழிகளின் பரம்பலும் இலங்கையில் நிகழ்ந்த முக்கிய முன்னேற்றங்களுள் குறிப்பிடத்தக்கவை. இலங்கையின் இரு பெரும் மொழி சார் இனக்குழுக்களின் உருவாக்கத்துக்கு இம் முன்னேற்றங்கள் முக்கியமானவை. இம் மொழிகளின் பரம்பலை இனங்களின் பரம்பலாகச் சமன்படுத்தி 'ஆரியர்' என்போர் குடியேறினர் என்றோ 'திராவிடர்' என்போர் குடியேறினர் என்றோ அல்லது வேறு இனக் குழுக்கள் பெருந்தொகையாக வந்து குடியேறினர் என்றோ கொள்வது தவறாகும்.

#### வரலாற்றியலில் ஏற்பட்ட தாக்கம்

இருபதாம் நூற்றாண்டில் இலங்கை வரலாற்றை எழுதிய பலர் கவலைக்குரிய வகையில் ஆரிய திராவிட இனங்கள் பற்றிய கட்டுக்கதைகளை ஏற்றிருந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் கீழைத்தேச ஆய்வில் ஈடுபட்ட எழுத்தாளர் தங்கள் படைப்புக்களில் சேர்த்துக் கொண்டனர்.

இதன் விளைவாக அறிஞர்களும் பொது மக்களும் சிங்கள மக்கள் ஆரிய இனத்தவர் என்றும் தமிழ் மக்கள் திராவிட இனத்தவர் என்றும் நம்பத் தொடங்கினர். எவ்வாறு இந் நம்பிக்கை பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து வளர்ச்சியடைந்தது என்பதைப் பேராசிரியர் குணவர்தன நன்கு விளக்கியுள்ளார்.

முதலில் சிங்கள மொழிக்கு ஆரிய மொழி என்ற அந்தஸ்து வழங்கப்பட்டு, பின்னர் அம் மொழியைப் பேசும் மக்களாகிய சிங்களவருக்கு ஆரியர் என்ற அந்தஸ்து வழங்கப்பட்டது.

ஆரியர் பற்றிய கருத்தைச் சிங்கள அறிஞர் ஆவலுடன் வரவேற்றனர். அது அவர்களை ஆட்சியாளருடைய உறவினர் நிலைக்கு உயர்த்தியது. இது பேராசிரியர் குணவர்த்தன வெளியிட்டுள்ள கருத்தாகும். 1860கள் தொடக்கம் ஆரியர் பற்றிய கட்டுக் கதையை நம்பியதால் இலங்கை வரலாற்றை எழுதியோர் தவறான ஒரு கருத்தைத் தாம் எழுதிய வரலாற்றில் நீண்ட காலம் சேர்த்து வந்துள்ளனர்.

அண்மைக்காலத்தில் இலங்கை வரலாற்றை எழுதிய முன்னணி வரலாற்றாசிரியர்கள் கூட இக் கட்டுக்கதைக்கு வலுவூட்டியுள்ளனர். 1980களில் வெளிவந்த நூல்களில் கூட இதனைக் காணலாம்.

'ஆரியர் குடியேற்றம்' என்பது நடந்தது என்பதை நம்பியது மட்டு மன்றி, ஆரியரா திராவிடரா முதல் இலங்கைக்கு வந்தனர் என்பது பற்றிக் கூடக் கருத் துத் தெரிவிக்கவும் இந் நூல்களை எழுதியோர் தயங்கவில்லை. 1990 களில் பேராசிரியர் குணவர்த்தன வெளியிட்ட கருத்துக்கள் இப் பொய்யான நம்பிக்கைகளைத் தகர்ப்பதற்கு உதவியுள்ளன.

இலங்கைக்கு ஆரியர் வருகை பற்றியோ திராவிடர் வருகை பற்றியோ எடுத்துரைக்க இடமில்லை. பொ.ஆ. முதலாம் ஆயிரவாண்டில் நடந்தது திராவிட மொழி மற்றும் இந்து ஆரிய மொழி ஆகியவற்றின் பரம்பல். இந்து-ஆரிய மொழிகள் இந்தியத் துணைக் கண்டத்தில் பரவிய காலத்தில் திராவிட மொழிகளும் பிற ஆஸ்திரோ-ஆசிய மொழிகளும் அங்கு பேசப்பட்டன. இப் பின்னணியை நோக்குமிடத்து இலங்கைக்கும் இம் மொழிகள் அதே காலத்தில் பரவியிருக்க முடியும்.

#### இள மக்களும் தமிழ் மக்களும்

இன்று இலங்கை என நாம் அழைக்கும் தீவில் இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன் புதிய பண்பாட்டுச் செல்வாக்குகள் பரவத் தொடங்கியதுடன் ஆதி இரும்புக் காலம் உதயமாகியது. இத் தீவில் அப்பொழுது இருந்த நிலையை நோக்குவோமாயின், அங்கு இலங்கை/லங்கா என்ற பெயர் கொண்ட அரசோ இராச்சியமோ இருக்கவில்லை; சிங்களம் என்று ஒரு மொழியோ தமிழ் என்று ஒரு மொழியோ இருக்கவில்லை; சிங்களவர் என்று ஓர் இனக் குழுவோ தமிழர் என்று ஓர் இனக்குழுவோ இருக்கவில்லை. இடைக் கற்காலத்தின் இருள்மயமான நிலையில் இருந்து புதிய இனக்குழுக்களின் உருவாக்கம் தொடங்கும் நிலையே இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன் காணப்பட்டது.

பேராசிரியர்
**கா. இந்திரபாலா**

பொ.ஆ. முதலாம் ஆயிரவாண்டு (இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்) தொடங்கிய போது சிங்களவர் என்போர் எந்த இடத்திலும் இருக்கவில்லை.

ஆகவே, சிங்களவர் வேறு ஓர் இடத்திலிருந்து வந்தமை பற்றிப் பேசுவது தவறாகும். குறிப்பிட்ட ஒரு காலத்தில் குறிப்பிட்ட ஓர் இடத்தில் இருந்து ஆங்கிலேயர் என்போர் இங்கிலாந்துக்கு வந்து குடியேறினர் என்றோ, பிரான்ஸ் நாட்டுக்குப் பிரெஞ்சு மக்கள் வந்து குடியேறினர் என்றோ கூறுவது பிழையாகும். (தொடரும்)

## அரசு வழங்கிய கால அவகாசத்தை நீடித்து நிரந்தர யுத்த நிறுத்தத்துக்கு செல்ல வேண்டும்

### தேசிய சமாதானப் பேரவை பணிப்பாளர் ஜெகான் பெரேரா

(கொழும்பு)

மோதல் நடைபெறும் பிரதேசங்களில் இருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு பொதுமக்கள் வருவதற்கு 48 மணித்தியால காலஅவகாசத்தை வழங்கியுள்ள அரசாங்கம், அக்கால அவகாசத்தை நீடித்து அதனூடாக நிரந்தர யுத்த நிறுத்தமொன்றுக்குச் செல்ல வேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவைப் பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா தெரிவித்தார்.

முல்லைத்தீவில் இருந்து மக்களை வெளியேற்றுவதானால் அது சர்வதேச கண்காணிப்புடனேயே நடைபெற வேண்டும். திக்கற்றவர்களாகத் தவித்துக்கொண்டிருக்கும் அம் மக்களின் தேவைகள் முழுமையடைவதற்கான சகல நடவடிக்கைகளையும் அரசாங்கமே மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

முல்லைத்தீவில் உள்ள நான்கு இலட்சம் பொதுமக்களை அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு அழைத்துவரும் பொருட்டு அரசாங்கம் 48 மணிநேரம் கால அவகாசம் அறிவித்திருக்கின்றமை தொடர்பில் கேட்டபோதே ஜெகான் பெரேரா இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

"பொதுமக்களைப் பாதுகாப்பதற்கென அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை மகிழ்ச்சி தரக்கூடிய விடயம் தான். ஆனாலும் தற்போதைய சூழ்நிலையில் அது மட்டும்போதாது என்றே கூறவேண்டும்.

அரசபடைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெறுகின்ற மோதல்களால் அங்கு சிக்குண்டுள்ள மக்களின் நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து வருகின்றது. பெருமளவிலான உயிரழிவுகளுக்கே இந்த மோதல்கள் வழிவகுத்துக் கொண்டிருக்கின்றன. பொதுமக்களை மீட்பதற்காக என்று அரசாங்கம் விடுத்திருக்கின்ற கால அவகாசத்தை மாற்றி அதனை மேலும் விரிவுபடுத்தும் விதத்தில் ஒரு நிரந்தர யுத்தம் நிறுத்தத்திற்கு செல்லவேண்டும் என்பதையே நாம் விரும்புகின்றோம்.

யுத்தப் பிரதேசத்தில் இருந்து மக்கள் வெளிக்கொணரப்பட வேண் டும். அதனை தேசிய சமாதா னப் பேரவை ஏற்றுக்கொள்கின்றது. அவ்வாறு வருகின்ற மக்கள் எங்கே செல்வது என்ற நிலையில் இருக்கின்றனர்.

இது விடயத்தில் சம்பந்தப்பட்டோரிடத்தில் விரி வானதொரு தெளிவு இருக்கவேண்டும். அரசகட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் அழைத்து வரப்படுகின்ற மக்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பொறுப்பெடுக்க வேண்டும் என்பதுடன், சர்வதேச கண்கா ணிப்பும் மிக அவசியமானது, அத்துடன் அந்த மக்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் சுதந்திரத் தன்மையிலும் அரசாங்கத் தின் செயற்பாடுகள் உண்மையானவையாக அமைவது அவசியம்.

யுத்தப் பிரதேசத்தில் இருந்து மக்களை வெளிக்கொணர்வதை மாத்திரம் கருத்திற்கொள்ளாது ஏனைய பிரச்சினைகளும் கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

அதற்கு மேற் குறிப்பிட்டவாறு தற்காலிக நடைமுறைகள் என்பது சாத்தியமாகாது என்றார். (ஓ-6)

## நலன்புரி நிலையத்தில் உள்ள மக்களுக்கு லயன்ஸ் கழகம் உதவி

(சாவகச்சேரி)

சர்வதேச லயன்ஸ் கழக 306பி 1 இன் மாவட்ட இணைப்பாளர் லயன் பிரியந்த பெர்னாண்டோ மிருசுவில் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களுக்கு வழங்குவதற்கென 20 ஆயிரம் ரூபா பெறுமதியான சவர்க்கார வகைகள், சமபோஷா பைக்கற்றுக்களை பிரதேச செயலரிடம் நேரில் கையளித்தார்.

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினரின் வேண்டுகோளையடுத்தே, மேற்படி பொருட்கள் கையளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-29)

## புதிய நிர்வாகசபை தெரிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஸ்ரீப்பழனி சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கத்தின் 17ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் தலைவராக திருமதி நந்தாயினி சூரியகுமார், உபதலைவராக பரிமளம் வைத்திலிங்கம், செயலாளராக செல்வி க.ஸ்ரீதுஷாந்தி, பொருளாளராக ம.விவேகானந்தன் ஆகியோருடன் சபை உறுப்பினர்களாக செல்வி நி.நளாயினி, செல்வி கு.சரஸ்வதி, திருமதி மு.வதனா தேஸ்வரி ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். (ஓ-29)


**2ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 01 ✠ 11 ✠ 1957

மறைவு 24 ✠ 01 ✠ 2007

திதி சஷ்டி 01.02.2009

**அமரர் V.K. ஜெகதீசன்**


(அதிபர் யா/சாந்தை சிற்றம்பலம் வித்தியாலயம்)

ஆண்டுகள் சென்றாலும் எம் நெஞ்சில் என்றும் வாழ்ந்திருப்பீர்

மாணிக்கவாசகம்
சங்கானை மேற்கு, சங்கானை

குடும்பத்தினர்

(2215)

மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கு கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினால் பாதணிகள் வழங்கப்பட்டபோது. வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன் மாணவன் ஒருருக்கு பாதணிகள் கையளிப்பதையும், அருகில் கரித்தாஸ் கியூடெக் நிறுவனப் பணியாளர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# கொமர்ஷல் வங்கியில்

# தற்போது வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர்கள் தாய்நாட்டின்

## அபிவிருத்தியில் பங்குகொள்ளக் கூடிய ஓர்

# முதலீட்டு வாய்ப்பு

**வெளிநாட்டு நாணயத்தை சம்பாதிக்கும் இலங்கையர்கள் இலங்கை ரூபாவில் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளில் முதலீடு செய்ய முடியும்**

இது தொடர்பாக மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட நிறுவனமான கொமர்ஷல் வங்கியின் ஊடாக இப்போது இம்முதலீடுகளை மேற்கொள்ள முடியும். இச்சிறப்பு முதலீட்டில் உங்களுக்கு கிடைக்கும் பல நன்மைகள்.

- வரிகள் அல்லது முத்திரைக் கட்டணம் எதுவுமின்றி கூடுதலான வட்டியை உங்களுடைய முதலீட்டிற்கு பெற்றுக்கொள்ள முடியும்
- முதலீட்டிற்கு அரசாங்க பாதுகாப்பு உண்டு
- நாணய மாற்று விகித கட்டுப்பாடுகளின்றி மூலதனத்தையும் வட்டியையும் பணமாக்கிக் கொள்ள முடியும்
- கொமர்ஷல் வங்கியின் நாடெங்கும் பரந்துள்ள 170 கிளைகள், வெளிநாடுகளிலுள்ள வியாபார ஊக்குவிப்பு அலுவலர்கள் அல்லது முகவர்களின் ஊடாக மூலதனத்தை முதலீடு செய்ய முடியும்

மூலதன நிறைவு விகித அளவுகோலான படி ஒன்று மூலதனத்தின் அடிப்படையிலேயே உலகிலுள்ள 1000 முன்னணி வங்கிகளின் பட்டியலில் இடம்பெற்ற முதலாவது இலங்கையின் வங்கியாகவும், அத்துடன் இலங்கையின் மிகச்சிறந்த வங்கியாகவும் விளங்கும் கொமர்ஷல் வங்கியின் நிதி உறுதிப்பாடு, நிதி ஸ்திரத்தன்மை, இடைவிடாத தரச்சிறப்பு ஆகியவற்றின் மூலம் அதிசிறந்த பலனை அடைய முன்வாருங்கள்.

முதலீடு செய்வது தொடர்பான விபரங்களுக்கு **treasury@combank.net** அல்லது **+94 11 2486346/2486347** ஊடாக சனத்/கெமால் உடன் தொடர்புகொள்ளுங்கள்.

கொமர்ஷல் வங்கி

*உங்கள் நலமே எங்கள் நோக்கம்*



இணுவில்

# திருவருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோவில்

## முப்பத்து மூன்று குண்ட அதியுயர் மஹாயாக

## புனராவர்த்தன ஸ்வர்ண பந்தன பிரதிஷ்டா



# மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்

## பிரதமகுருவின் ஆசிச் செய்தி


ஓங்காரப் பொருளாக பிரணவ வடிவாக இருந்து ஞான அருளையும் நல வாழ்வையும் அடியவர்களுக்கு அகத்தேயும், புறத்தேயும் அள்ளி வழங்கிக் கொண்டிருக்கும் எங்கள் குல தெய்வம் பரராஜசேகர விநாயகனுக்கு இன்று குடமுழுக்கு நன்நாள் ஆகும். இத்திருநாளில் ஆலயம் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் அழகுக் கலை ததும்பப் பரிணமிக்கின்றது.



இன்று நீங்கள் எல்லோரும் மன்னர்கள், அரசர்கள்,இராஜாக்கள். ஆம்,அந்தக் காலத்தில் கோபுரங்கள் கட்டுதற்கும்,கோவில்கள் அமைப்பதற்கும் அரசர்களால் மாத்திரமே முடியக் கூடிய காரியமாக இருந்தது. இன்று இவைகள் எல்லாம் உங்களால் நிறைவேறியுள்ளது. இது எம்பெருமானாகிய ஸ்ரீ பரராஜகேரப் பிள்ளையார் மீது நீங்கள் கொண்ட பற்றினதும், பக்தியினதும் வெளிப்பாடாகும். இப்புனித கைங்கரியம் நிறைவேற நீங்கள் எல்லோரும் மனமுவந்து வழங்கிய ஆதரவே காரணம். நீங்கள் யாவரும் எல்லாச் செல்வங்களும் வளம்பெறப் பெற்று நீடுழி வாழ வேண்டும் என எல்லாம் வல்ல ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் பாதம் போற்றி வேண்டுகின்றேன். அன்று எங்கள் கோவில் மூலஸ்தானம் முதல் கொடித் தம்பம் வரை வைரக் கல்லால் கட்டிய கற்கோவில் இருந்தது. அன்றைய மக்கள் தாம் மண் குடிசையில் வாழ்ந்துகொண்டு இறைவனுக்கு கற்கோவில் கட்டி வணங்கி வந்தனர். இன்று எல்லோரும் வளம் பெற்று வசதிகளோடு வாழ்ந்து வருகிறார்கள். இப்படியெல்லாம் வாழ்கின்ற நாம் நம்மை வாழவைத்த இறைவனுக்கு மாத்திரம் எப்படித் திருப்பணிகளை செய்ய முடியாமல் இருக்க முடியும்? அதனால் இத்திருப்பணியை அடியார்கள் எல்லாருமே முன்னின்று நடாத்தி முடித்திருக்கின்றார்கள்.

குடமுழுக்கு நடைபெறும் புனித நன்நாளிலே விநாயகன் என்றுமே அடியவர்களது இடர் களைந்து நல்ல சுபீட்சத்தையும்,எதிர்காலத்தையும் வழங்க வேண்டுமெனப் பிரார்த்திப்பதோடு,திருநெறிய தமிழ்மறைக் கழகத்தின் மலர் சிறக்கவும் பிரார்த்திக்கின்றேன்.

**சிவஸ்ரீ வை.சோமாஸ்கந்தக் குருக்கள்**
**பிரதமகுரு, இணுவில்**
**ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார்திருக்கோவில்**



**தை மாதம் 19ம் நாள் (01-02-2009) ஞாயிற்றுக்கிழமை**
**இராஜகோபுரம் -காலை 7.26 மணி**
**மஹா கும்பாபிஷேகம் -காலை 8.15 மணி**
**கும்பாபிஷேகத்தை தொடர்ந்து ஆசிரியுரை வழங்கப்படும்.**

**உச்சிக் காலப் பூஜையைத் தொடர்ந்து அன்னதானமும், மாலை 4.30 பூஜையைத் தொடர்ந்து பஞ்ச மூர்த்திகள் வீதியுலாவும் இடம்பெறும். மாலை 6.30 மணிக்கு கும்பாபிஷேக சிறப்பு மலர் திருநெறிய தமிழ் மறைக் கழகத்தினரால் வெளியிடப்படுகிறது.**

இணுவையம்பதியிலே கோவில் கொண்டு எழுந்தருளிய பரராஜசேகரன் ஆலயத்தில் மட்டுமல்ல ஊர் வாழும் அடியவர் களின் உள்ளத்திலேயும் உறைந்திருந்து, அருளொளி கொடுப்பதோடு நின்று விடாது,செல்வச் செழிப்பையும், கல்வி வளத்தையும், பொருளாதாரத்தையும்,அற ஒழுக்கங்களையும் அள்ளி வழங்குகின் றான்.

*''எப்பொருள் எத் தன்மைத் தாயினும் அப்பொருள்மெய்பொருள் காண்பதறிவு''* என்ற குறளுக்கு இணங்க இக் கோயிலின் தன்மையை வரலாற்று ரீதியாக அறிய முடியாவிட்டாலும் இதன் பூர்வீகம் பரராஜசேகர மன்ன னால் பூசிக்கப்பட்ட பெருமைக்குரியது. இதன் பின்பு போர்த்துக்கீசர் காலத்தில் மடம் என வாதிட்டு கோவிலை பாதுகாத்துக் கொண்டதால் மடத்துவாசல் பிள்ளையார் எனப் பெயர் பெற்றது. இது ஈழத்து பிரசித்தி பெற்ற அருள் தலங்களில் பழமையும், புதுமையும், சாந்நித்தியமும் பொருந்தியதாகும். இவ்வாறாக படிப்படியாக வளர்ச்சி பெற்று இன்று நாற்றிசையும் கோபுரங்களுடன் அழகிய சிற்ப ஓவிய வர்ண வேலைப்பாடுகளுடன் காட்சியளிக்கின்றது. இதற்குக்காரணம் அடியவர்க ளின் கூட்டுறவு மனப்பான்மையும்,வேற்றுமையில் ஒற்றுமை காணும் உயரிய பண்புமே ஆகும்.

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோவில் காலத்திற்குக் காலம் புதுப்பிக்கப்பட்டு ஆகம விதிப்படி 12 ஆண்டுக்கு ஒரு முறைகும் பாபிஷேகம் நடைபெற்று வந்துள்ளது. 1928 ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருத்த வேலைகள் நடைபெற்று 1939ஆம் ஆண்டும் அதன் பின் 1961ஆம் ஆண்டு தை மாதம் 9ஆம் திகதியும் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 1972ஆம் ஆண்டு புதிதாக அமைக் கப்பெற்ற இராஜகோபுர கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. 1983ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு 1984ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி திங்கட்கிழமை அடுத்த கும்பாபிஷேகமும் 9.2.1997ஆம் ஆண்டு ஞாயிற்றுக்கிழமை 33 குண்ட மஹா யாக கும்பாபிஷேகமும் சிறப் பாக நடைபெற்றது. அந்த வகையில் பன்னிரண்டு கால வருட இடைவெளியில் மீண்டும் 2008 ஆம் ஆண்டு ஆவணி மாதம் பாலஸ்தாபனம் செய்யப் பட்டு 2009 ஆண்டு தை மாதம் கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

காலங் காலமாய் நடைபெற்ற ஒவ்வொரு கும்பாபிஷேகங்களின் போதும் கோவிலில் வெவ்வேறு வகையான சிறப்பம்சங்கள் இடம்பெற்று வருவது வழமையாகும். அந்த வகையில் இவ்வருடமும் கோவிலின் மேற்கு வீதியில் ஐந்து தளங்களைக் கொண்ட ஒரு கோபுரமும், வடக்கே பஞ்சமுக விநாயகர் ஆலயத்திற்கான புதிய ஒரு வாசலுடன் கூடிய ஐந்து தளங்களைக் கொண்ட இன்னுமொரு கோபுரமும் அமைந்துள்ளது. இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட ஜலகண்ட கணபதி, கோயிலின் வடக்கு வீதியில் புதிதாக அமையப்பெற்ற தாமரை வடிவான சிறிய கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் வைரவர் எழுந்தருளி விக்கிரகமும் பிரதிஷ்டை செய்யப்படுகின்றது. நான்கு திசைகளும் அழகிய சிற்ப வேலைகளுடன் கூடிய வானளாவிய கோபுரங்கள் தெய்வீக அருள்சுரந்து காட்சிதருகின்றது. இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோவில் இன்று சரியாக காலை 8.15 மணிக்கு சுப முகூர்த்த வேளையில் உத்தமோத்தமருத்திர சூத்திர யாகசாலையில் 33 குண்டலங்களிலும் திக்கெட்டும் திருவருள் பொழிய வேண்டித் திருமறையுடன் திருமுறைகளும் ஓதி, அபி சொரிந்து, ஆகுதி செய்து, வேத கீத தோத்திர சங்க மங்கல வாத்திய கோஷங்களுடன், மகா கலச தீர்த்தங்களினால் மஹா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. 24.01.2009 வெள்ளிக்கிழமை அதிகாலை வேளையில் குருஹோறையில் கணபதி ஹோமத்துடன் ஆரம்பித்த கும்பாபிஷேக கிரியைகள் இன் றைய தினம் நிறைவு பெறுகின்றது. கும்பாபிஷேகம் ஆவர்த்தனம், அநாவர்த்தனம், புனராவர்த்தனம்,அந்தரிதம் என நான்கு வகைப்படும். இவற் றுள் புனராவர்த்தனம் என்பது கர்ப்பகிரகம், விமானம் முதலான கோவிலின் கட்டடங்களைப் புதுப்பித்து விமானம், கோபுரம் போன்றவற்றிற்கு வர்ணப் பூச்சு மேற்கொண்டு அஷ்ட பந்தனம், ஸ்வர்ண பந்தனம் சாற்றி கும்பாபிஷேகம் செய்வதாகும்.

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் தமது திருக்கரங்களிலே பாசம்,அங்குசம்,தந்தம்,மோதகம், கும்பம் என்பன தாங்கியுள்ளார். மேலே உள்ளவலக்கரம் அங்குசத்தையும், இடக்கரம் பாசத்தையும், கீழே உள்ள வலக்கரம் ஒடித்த ஒற்றைத் தந்தத்தையும்,இடக்கரம் மோதகத்தையும், தும்பிக்கை கும்பத்தையும் தாங்கியுள்ளன. பிரணவ சொரூபத்தை இந்த விநாயகப்பெருமானை தினமும் வழிபாடு செய்து வந்தவர்கள் கஷ்டங்கள், துயரங்கள் நீங்கப் பெற்று நல்வாழ்வு பெற்றார்கள். அவரது கருணை அளவிற்கரியது. அவரது பாதார விந்தங்களைப் பற்றியோரின் வாழ்வு செழித்தது. அவரது திருக்கோவிலில் தொண்டு புரிந்தோரெல்லாம் பல முன்னேற்றங்களைக் கண்டு நிறைந்த வாழ்வு கண்டார்கள்.

**விநாயக அடியார்கள்.**

## ஆசியுரை

இணுவில் அருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலில் முப்பத்து மூன்று குண்ட சகிதமாக உத்தமபட்ச மஹா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெறுகிறது. ஆலயங்களில் மஹா கும்பாபிஷேகம் நடந்து நித்திய, நைமித்தியங்கள் சிறப்பாக நடைபெற்றால் தான் ஊரும் நாடும் உவப்புடன் வாழும் என்பது அறிஞர் கருத்து.

சிவஸ்ரீ இராமநாதக் குருக்கள் ,சிவஸ்ரீ கைலாசநாதக் குருக்கள் முதலிய பேரறிஞர்களும் கைராசிக்காரர்களுமான சிவாச்சாரியப் பெருந்தகைகளின் ஆலோசனை , அனுசரணைகளுடன் நடைபெற்ற அந்தக் கும்பாபிஷேகம் அருள்விளக்கம் பொலிவதாக அமைந்திருந்தது. அதற்குப் பிறகு இப்போது இரண்டு கும்பாபிஷேகங்கள் நிகழ்ந்துள்ளன. ஆனால் விநாயகப் பெருமானின் திருவுருவம் அசைவின்றி அவ்விடத்திலேயே இருப்பது பெருமைக்குரிய ஒரு விடயம். அதாவது பேரசலனம் செய்து மூர்த்தியை பாலமூர்த்தியில் பிரதிஷ்டை செய்யும் மரபு இவ் வாலயத்தில் பின்பற்றப்படுகிறது. இதுவும் ஆகம சம்மதமானதே.

இம்முறையும் நாடறிந்த சிவாச்சாரியப் பெருந்தகைகள் பலரும் கலந்து கொண்டு நல்ல முறையில் நடைபெறும் இந்தக் கும்பாபிஷேகம் நாட்டு மக்கள் அனைவருக்கும் நலம் பயப்பதாக அமையவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**''சர்வ ஜனாக சுகினோ பவந்து- வாழ்க வளமுடன்''**

**சிவஸ்ரீ ந.உருத்திரமூர்த்திக் குருக்கள்**
**இணுவில், கந்தசுவாமி கோவில்**

## வாழ்த்துச் செய்தி.

அருள்மிகு இணுவில் ஸ்ரீ பரராஜசேகர விநாயகப் பெருமானின் கும்பாபிஷேக மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதற்கு கிடைத்த பாக்கியத்தை நினைத்து மட்டற்ற பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். எமது குல தெய்வமான விநாயகப் பெருமானின் அருளால் எம்மூர் மக்கள் வாழ்க்கையில் ஏற்றம் கண்டு வருவதை உணர்ந்து நாம் மகிழ்ச்சிக் கடலில் தழைத்திருக்கின்றோம். சைவமும் தமிழும் செழித்து வளரும் இணுவில் பதி சமய வாழ்விற்கும் ஒழுக்கத்திற்கும் பெயர் பெற்றதாகும். அத்தகைய ஊரின் பெருமைக்கும் வரலாற்றுச் சிறப்பிற்கும் அடிநாதமாக அமைந்திருப்பது எமது ஆலயம் எனக் கூறினால் அது மிகையாகாது. இன்றும் பரிபாலன சபையோ அன்றி வேறேனும் நிர்வாகக் கட்டமைப்புக்களோ எதுவுமின்றி முழுமையான மக்களின் ஒத்துழைப்புடன் இயங்கிவரும் ஆலயம் இதுவெனக் கூறினால் அது மிகையாகாது.

இவ்வருடத்தைய கும்பாபிஷேக நிகழ்வை முன்னிட்டு ஆலயத்தில் இடம்பெற்றுவரும் திருப்பணிகள் மகிழ்ச்சியளிப்பதாக உள்ளன. மேற்குப்புறம் , வடக்குப்புறம் என்பவற்றில் இரு வாயில்கள் ஏற்படுத்தப்பட்டு இரண்டு பிரமாண்டமான கோபுரங்கள் அமைக்கப்பட்டிருப்பது ஆலயத்திற்கு புதுப்பொலிவூட்டுவதாக அமைந்துள்ளன. அதுமட்டுமன்றி ஆலயக்கட்ட மைப்பில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் எல்லாத் திருப்பணிகளும் ஆலயத்தின் தோற்றத்தை இந்திரலோகம் போல் மாற்றிவிட்டது எனக் கூறினால் அது மிகையாகாது. இத்தகைய பணிக ளுக்கு முன்னின்று உழைத்த சிவாச்சாரியார்களும் பெரியார்களும் பொதுமக்களும் இளைஞர்களும் பாராட்டப்பட வேண்டியவர்களாவர்.விநாயக அடியார்களினது ஒத்துழைப்புடன் இடம் பெறும் ஆலய புனரமைப்பும் கும்பாபிஷேகமும் சிறப்பாக இடம் பெற எல்லாம் வல்ல ஸ்ரீ பரராஜசேகர விநாயகனின் பாதங்களை இறைஞ்சுவதுடன் அன்றைய தினம் வெளியிடப்படும் கும்பாபி ஷேக மலர் சிறப்பாக வெளிவர எல்லாம் வல்ல பரம்பொரு ளின் துணையை நாடி நிற்கின்றேன்.

**க.தேவராசா -போசகர்,**
**திருநெறிய தமிழ் மறைக்கழகம்.**
**பீடாதிபதி,முகாமைத்துவ கற்கைகள்**
**வணிகபீடம்,யாழ்.பல்கலைக்கழகம்.**

சீ. 2091


**இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோவில்**
**மஹா கும்பாபிஷேக மலர் சிறக்க வாழ்த்துகின்றோம்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அண்ணா கோப்பி<br>இணுவில். | பெஷன் ஹவுஸ்<br>யாழ்ப்பாணம். | K.R.S.உற்பத்திப் பொருட்கள்<br>கோண்டாவில். | சிந்தூரம் சுப்பர் மார்க்கட்<br>இணுவில். | Profitable Construction<br>இணுவில். | லிங்கம் ஸ்ரோர்ஸ்<br>இணுவில். | சீமாட்டிபுடவைக் கடல்<br>யாழ்ப்பாணம். |
| ஐங்கரன் இன்ரநஷ்னல்<br>லண்டன். | கஜசங்கவி சென்டர் &<br>பிறின்டர்ஸ்<br>யாழ்ப்பாணம். | GISO Construction<br>இணுவில். | ஸ்ரீக்குமரன் ஹாட்வெயார்<br>யாழ்ப்பாணம். | Unique<br>வீடியோ<br>இணுவில். | ஐங்கரன் ஸ்ரோர்ஸ்<br>தாவடி | லக்சுமிஇரும்பகம்<br>கோண்டவில். |
| ES.Mart<br>கொழும்பு. | கஜமுகன் ஹாட்வெயர்<br>யாழ்ப்பாணம். | Denshi Photo<br>கொழும்பு. | சாயி நகைத் தொழிலகம் ,<br>பல்பொருள் விற்பனை நிலையம்<br>இணுவில். | COC கணனிக் கல்லூரி<br>இணுவில். | அருணகிரி ஸ்ரோர்ஸ், &<br>மல்ரி ஸ்பொட்<br>இணுவில் | சிறி ஐங்கரன் வெதுப்பகம்<br>இணுவில். |
| Oriolesys<br>கனடா | குகன் ஸ்ரோர்<br>யாழ்ப்பாணம். | இளவரசி சேலைச் சோலை<br>யாழ்ப்பாணம். | துரை தச்சுத் தொழிலகம்<br>தாவடி. | கணபதி மருந்து வியாபாரம்<br>கோண்டாவில். | விஷ்னு வீடியோவிஷன்,<br>லிங்கம் கொமினிகேஷன்<br>இணுவில். | கார்த்திக் பந்தல் சேவை<br>கோண்டவில். |
| சாந்தி புடவை அகம்<br>யாழ்ப்பாணம். | ஸ்ரீ முத்து மாரி அம்மன் ரேடர்ஸ்<br>யாழ்ப்பாணம். | அம்பிகாபதி,<br>அம்பிகை அழகு மாடம்<br>யாழ்ப்பாணம், இணுவில். | ஆனந்தன் கட்டிடப்பொருள்கள்<br>விற்பனை நிலையம்<br>இணுவில். | ஐங்கரன் பந்தல் சேவை<br>இணுவில். | சந்தோஷ்கிறீம் ஹவுஸ்<br>இணுவில். | Andra Digital<br>Images & Printers<br>Kondavil |
| சக்திவேல்<br>ஹாட்வெயர்<br>இணுவில். | வேணி களஞ்சியம்<br>யாழ்ப்பாணம். | நாதன் அன்பிரதர்<br>இணுவில். | சுந்தர்சன்<br>மானிப்பாய். | Mult oil Industries Ltd<br>இணுவில். | ஐங்கரன் பான்சி<br>சுன்னாகம் | |

மிகப்பெரிய உதவியும் உதவியே! மிகச் சிறிய உதவியும் உதவியே.

~ அயர்லாந்து

வலம்புரி

## உறவுகளின் நிலையை அறிய உரிய நடவடிக்கை தேவை

வன்னிப் பகுதியில் தொடரும் யுத்தத்தினால் தமது குடும்பத்தினர் எங்கு தங்கியுள்ளனர் என்பதை அறிய முடியாமல் யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள வன்னிப் பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள உறவினர்கள் தவிக்கின்றனர்.

கல்விக்காக வன்னிப் பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்த பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் கல்வியியல் கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை போன்றவற்றின் மாணவர்களும் இந்தத் தவிப்பில் தத்தளிக்கும் பரிதாபம் வேதனை தருவதாகும்.

இதேபோன்று 1995ஆம் ஆண்டு யாழ்.குடாநாட்டை இராணுவம் கைப்பற்றியபோது வன்னிக்குச் சென்றவர்களின் நிலை என்ன? என்பது அறிய முடியாமல் யாழ்ப்பாணத்தில் இருக்கும் உறவுகள் கண்ணீர் வடிக்கின்றனர்.

வயோதிபத் தாயும், தந்தையும் யாழ்ப்பாணத்தில், பிள்ளைகள் வன்னியில் என்ற நிலைகளும் உண்டு.

இவ்விதம் வன்னியிலுள்ள தமது பெற்றோருக்கு, சகோதரருக்கு பிள்ளைகளுக்கு என்ன கதி? அவர்கள் எங்கிருக்கின்றனர் என்பதை அறியமுடியாத அவலம் சாதாரணமானதல்ல.

ஒவ்வொருநாளும் எறிகணை வீச்சில் மக்கள் பலியாகி வருவதான செய்திகள் இங்கிருக்கும் மாணவர்களையும் உறவுகளையும் வதைக்கின்றது.

இதனால் மாணவர்கள் தமது கற்றல் செயற்பாட்டில் ஈடுபடமுடியாமல் தவிக்கின்றனர்.

இதைவிட அவர்களுக்கான நிதித்தேவை, உணவுத்தேவை என்ற அடிப்படைப் பிரச்சினைகள் வேறு. நிலைமை இப்படியே நீண்டு செல்லுமாக இருந்தால் அதனால் ஏற்படும் உளத்தாக்கம் பெரும் பாதிப்பாக அமையும்.

எனவே, இது விடயத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இங்குள்ள மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களின் விபரங்களை அறிந்து தகவலைத் தெரியப்படுத்த வேண்டும்.

இவ்வாறு தகவலை தெரிவிப்பது மிகப் பெரும் உதவியாக இருக்கும். தமது உறவுகளின் நிலையை அறியத் தவிக்கும் உள்ளங்களுக்கு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இந்தப் பணியை விரைந்து செய்யும் என நம்பலாம்.

# 13 ஆவது திருத்தத்தை மீறிய அதிகார பரவலாக்கலை வழங்க அரசுக்கு பெரும்பான்மை இல்லை

## அக்கறையிருந்தால் எதிர்க்கட்சி யோசனைகளை முன்வைக்கலாம் என்கிறது அரசு

(கொழும்பு)

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்திற்கு அமைவாகவே அரசாங்கத்தால் அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்ள முடியும். அதனை மீறிய எந்தவொரு அரசியல் தீர்வையும் முன் வைக்க முடியாது. எனவே, தமிழ் மக்கள் மீது உண்மையில் எதிர்கட்சியினருக்கு அக்கறை இருந்தால் சர்வகட்சி மாநாட்டில் தமது யோசனைகளை முன்வைக்கலாம்.

இதேவேளை, மூவா யிரம் இந்தியப் படையினர் இலங்கை வந்துள்ளனர் என்ற செய்தியில் எந்தவிதமான உண்மையும் கிடையாது என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் அரசாங்கத் தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே தகவல் ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில், எமது படையினர் யுத்தத்தை சிறந்த முறையில் முன்னெடுக்கின்றனர். வடபகுதி முழுவதையும் கைப்பற்றிய பின்னர் அங்கு தேர்தல்கள் நடத்தப்படும்.

அத்தோடு, 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அமைய அதிகாரம் பரவலாக்கப்படும். அதனை மீறிய அதிகாரப் பரவலாக்கலையோ வேறு எந்த வொரு அரசியல் தீர்வையோ அரசாங்கத்தால் முன்வைக்க முடியாது. அதற்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் அரசாங்கத்திடம் இல்லாததே இதற்குக் காரணமாகும்.

யுத்த வெற்றிகளைப் பாராட்டும் ஐக்கிய தேசியக் கட்சி, யுத்தத்திற்குப் பின்னரான தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குவதில் உண்மையான அக்கறை கொண்டிருந்தால் சர்வ கட்சி மாநாட்டில் கலந்துகொண்டு அரசியல் தீர்வு யோசனைகளை முன்வைக்கலாம் அதன் போது ஏனைய கட்சிகளுடன் கலந்தாலோசித்து 13ஆவது திருத்தத்தை மீறிய அதிகாரப் பரவலாக்கலை வழங்க முடியும். 13ஆவது திருத்திற்கு மேலாக அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்ளவேண்டு மானால் அரசியல் அமைப்பை மாற்ற வேண்டும். ஆனால் அதற்கான மூன்றில் இரண்டு பெரும் பான்மை அரசாங்கத்திடம் இல்லை. எதிர்க்கட்சியின் ஒத்து ழைப்புடனேயே இவ்வாறான நிலைப்பாட்டை மேற்கொள்ள முடியும் என்றார்.

இதேவேளை மூவாயிரம் இந்தியப்படையினர் இலங்கை வந்துள்ளனர் என்ற செய்தியில் எதுவிதமான உண்மையும் இல்லை. 1989இல் இந்திய எதிர்ப்பை இலங்கையில் ஜே.வி.பி. ஏற்படுத்தி பாரிய அழிவுகளை மேற்கொண்டது. அதே போன்று இன்றும் தேசிய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் இலங்கை விஜயத்தை பெரிது படுத்தி திரிபு படுத்தி மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்த ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க முயற்சிக்கின்றார்.

விடுதலைப்புலிகளுக்கு எதிராக இலங்கையில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு இந்தியா எதுவிதமான எதிர்ப்பையும் வெளியிடவில்லை. இடம்பெயர்ந்துள்ள மக்களின் பாதுகாப்பு தொடர்பிலேயே கவனம் செலுத்தியிருந்தது. இம் மக்களின் பாதுகாப்பிற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித் துள்ளார். இதனை இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளது. (ஓ-6)

## தொழிற்பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

பாலராஜி சமூக வலுவூட்டல் நிறுவனத்தால் இளைஞர் யுவதிகள், குடும்பத்தலைவிமார் மற்றும் மாற்று வலுவுடையோர்களிற்கான தொழில் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. வீட்டு மின்னிணைப்பு, மோட்டார் றிவைண்டிங், மகளிருக்கான ஆடை தயாரித்தல், தையல் இயந்திரம் திருத்தல், அழகுக்கலை பயிற்சி, கேக், ஐசிங், கைவினைப் பொருட்கள் தயாரித்தல், பெயின்ரிங், அலுமினிய பிற்றிங், கணனி பயிற்சி போன்ற பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பயிற்சிக்காலத்தில் உதவுதொகை வழங்கப்படவுள்ளது. இப் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் சுயமாக தயாரித்த விண்ணப்பத்தினை இயக்குனர், 249, பாலராஜி சமூக வலுவூட்டல் நிறுவனம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். பயிற்சிகள் யாவும் பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. (6)

### இன்று இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் ஆலய குடமுழுக்கு

**இணுவிலூர் குடமுழுக்கு விழாக் காணும் பரராஜசேகரப் பிள்ளையாரே வாழி வாழ்கவே!**

தங்கம் எழில் கோவில் தாங்கிடும் கோபுரக் கலசம்
திங்களும் ஞாயிறும் ஒளிபரப்ப தூபிகள்
கலசமொடு குடமுழுக்கு
மங்கள விழாக் காணும் மதிமிகு விநாயகர் கும்ப
அபிடேகம்
மங்கை பாகன் சிவனார் முதல் மகன் கணபதிக்கு
புனித நீராட்டு
பங்கமில்லா முத்தமிழ் இணுவிலூர் பரராஜ
சேகரப் பிள்ளையார்
பார்புகழும் தெய்வக் கோவில் பக்தி முக்தி
விளங்கக் கங்கைகுளியல்
சங்கத் தமிழாட்சி மன்னன் சீர் பரவுபரராஜ
சேகரன்
சமைத்த பரராஜசேகர சிவசக்தி ஐந்து முகப்
பிள்ளையார் வாழி!

என்.தமிழ்மகன்

### பாவங்கள் பொடி பட பார்த்திடுவோம் குடமுழுக்கு

கண்டின் புறுவோம் கவினார் குடமுழக்கு
தாமரைப் பீடத்தில் தனிப்பெருங் கடவுளாய்
ஓமெனும் பிரணவ ஒங்கார மூர்த்திக்கு
இணுவையம்பதியில் அணிசெய் ஆலயத்தில்
கும்ப நீராட்டிக் கும்பாபிஷேகம்
பொலிவுறு திருத்தலம் புனிதம் துவங்கிட
பரிவார மூர்த்திகளுக்கு பன்னீர் குடகுழுக்கு
கோபுர கலசங்களுக்கு மந்திர அபிடேகம்
பாபங்கள் பொடிபட பார்த்திடுவோம் குடமுழுக்கு

கா. கார்த்திகேசு.

# காணிக்கையாக்குவோம்

"காணிக்கை தந்தோம் கர்த்தாவே ஏற்றுக் கொள் எம்மை இப்போதே'' என்று கவிஞன் பாடுவது அவனது நன்றி உள்ளத்தைக் காட்டுகிறது.

மனிதர்களின்அடிப்படைப் பண்பாக இருப்பது நன்றி. இந்த நன்றி பல நிலைகளில், பல முறைகளில், பல வழிகளில் காட்டப்படுகின்றது. பிள்ளைகள் பெற்றோர்க்கு நன்றி செலுத்திகின்றார்கள், மாணவர்கள் ஆசிரியர்களுக்கு நன்றி செலுத்துகின்றார்கள்.

## பரமபிதா காட்டிய பாதை


அதைப் போல இறைவன் தங்களுக்குச் செய்த நன்மைகளுக்கும், கொடைகளுக்கும் நிலத்தின் முதல் கனியை கடவுளுக்கு காணிக்கையாகக் கொடுப்பது என்பது தொன்று தொட்டு வருகின்ற நல்ல பழக்கங்களில் ஒன்று. அப்படிப்பட்ட பழங்கால வழக்கில் விலங்குகள், காய்கனிகள் மட்டுமல்லாமல் பெற்றபிள்ளைகளைக் கூட நன்றிப் பெருக்கினால் கடவுளுக்கு காணிக்கையாக ஒப்புக் கொடுப்பது மரபு.

இன்றைய விழாவைப் பற்றி ஒரு கேள்வி. பெருட்களை, விலங்குகளை காணிக்கையாகக் கொடுப்பதில் அர்த்தம் இருக்கிறது. ஆனால் இயேசுவை காணிக்கையாகக் கொடுத்தலின் அர்த்தம் என்ன? தேவை என்ன?

யூத பழக்கத்தின் படி ஒவ்வொரு குடும்பமும் வீட்டின் தலைச்சன் பிள்ளையை கோவிலுக்கு என்று காணிக்கையாக ஒப்புக்கொடுக்க வேண்டும். காணிக்கையாக்கப்பட்ட எந்த பொருள் மீதும் அதன் உரிமையாளருக்கு பங்கோ, உரிமையோ கிடையாது. அது முழுக்க முழுக்க இறைவனுக்குச் சொந்தம் என்பதாகும்.

இயேசுவும் தலைப் பேறான மகன் என்பதால் கடவுளுக்காக காணிக்கையாக்கப்பட்டார். அவருடைய தலைமுடியும் வெட்டப்படவில்லை. எனவேதான் அவர் நசரேன் என்று அழைக்கப்பட்டார்.

அதே வேளையில் ஒரு ஆழமான உண்மையையும் புரிந்து கொள்ளவேண்டும் ஒரு பொருளையோ, அல்லது ஒரு பிள்ளையோ காணிக்கையாக ஒப்புக் கொடுப்பதற்கு அதிக தியாகம் இருக்க வேண்டும். காரணம் காணிக் கையாக்குவது என்பது ஒன்றை இழப்பதைப் போல. அந்த இழப்பிற்கு ஒருவர் தயாராக இருக்க வேண்டும். அன்னை மரியாளும் தன் ஒரே மகனை காணிக்கையாக்கி அவரை இழக்கத் தயாரானாள். அதனால் தான் பழைய முறையில் இந்த விழா காணிக்கை அன்னை விழா என்றும் அழைக்கப்பட்டது. தன்னை தன் தாய் மரியா கோவிலில் இறைவனுக்கு என்று காணிக்கையாக ஒப்புக் கொடுத்த பிறகு, தன்மீது அவருக்கு உரிமை கிடையாது என்பதை, இயேசு ஆழமாக பின்வரும் பகுதியில் வெளிப்படுத்துகின்றார்.




"அம்மா, ஏன் என்னைத் தேடினீர்கள்? என் தந்தையின் அலுவல்களில் நான் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?'' (லூக் 2.49)

இன்று நாம் உயிர்வாழ, அன்று நம் பெற்றோர்கள் தங்கள் குருதியை அமுதாகக் கொடுத்தார்கள். இன்று நாம் மீட்படைய, அன்று இயேசு தன்னையே சிலுவையில் தந்தைக்கு பலி கொடுத்தார். இன்று நாம் வாழ்வு பெற, அன்று மரியா தன் ஒரே மகளை கோவிலில் காணிக்கையாக்கினாள். அந்த இறைவனுக்கு இன்று நாம் எதைக் காணிக்கையாக்கப் போகிறோம்?


*ஜோன் ரொபேர்ட்.*

# தமிழனைத் தாண்டிய இந்திய- இலங்கை உறவு



இலங்கை இராணுவத்தின் கண்மூடித்தனமான தாக்குதலில் தொடர்ந்து பாதிப்பிற்குள்ளாகிவரும் ஈழத் தமிழர்களைக் காக்க போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துவார் என்று 'மிகவும் எதிர்பார்க்கப்பட்ட' வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, அப்படி எந்தக் கோரிக்கையையும் விடுக்காதது மட்டுமன்றி, அவர் கொழும்பில் இருந்து திரும்பியதும் விடுத்துள்ள அறிக்கையும், இந்திய-இலங்கை உறவில் தமிழர்களோ அல்லது அவர்களின் பிரச்சினைகளோ ஒரு பொருட்டல்ல என்பதையே தெள்ளத் தெளிவாகக் காட்டியுள்ளது.

கொழும்பு புறப்படுவதற்கு முன்னர், அமைச்சர் பிரணாப் முகர்ஜி தமிழக முதலமைச்சரை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார் என்று வந்த செய்தியால், நிச்சயம் இவர் போர் நிறுத்தம் பற்றித்தான் பேசுவார் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்ததில் எந்த ஆச்சரியமும் இல்லை. ஆனால், கொழும்பு சென்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்த அமைச்சர் பிரணாப், "விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் அப்பாவித் தமிழர்கள் அதிகம் கொல்லப்படாமல் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று கூறியதாக வந்த செய்தியைத் தவிர, போர் நிறுத்தம் பற்றி ஏதும் பேசியதாக எங்கும் கோடிட்டுக் கூடக் காட்டப்படவில்லை.



தனது இலங்கைப் பயணம் குறித்து அமைச்சர் பிரணாப் முகர்ஜி விடுத்துள்ள அறிக்கையிலும் சரி, அவர் இலங்கை ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுவார்த்தை குறித்து இந்திய வெளியுறவு அமைச்சகம் விடுத்த அறிக்கையிலும் சரி, 'போரினால் அப்பாவித் தமிழர்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுங்கள்' என்று கேட்டுக்கொண்டதாக எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை.

போர் நடக்கும் இடத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்புப் பகுதிகளில் தாக்குதல் நடத்தக்கூடாது என்று ;உறுதிமொழியை மட்டும் பெற்றுக்கொண்டதாகத்தான் வெளியுறவு . அமைச்சக அறிக்கை கூறுகிறது.

இந்தியா, இலங்கை இடையே ஆழமான, வலிமையான, இதமான உறவு மலர்ந்துள்ளதாக வெளியுறவுச் செயலர் சிவ் சங்கர் மேனன் தனது பயணத்தில் குறிப்பிட்டதைப் போலவே, அமைச்சரின் இந்தப் பயணத்திலும் ' இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு பலமாக மேம்பட்டு வருவதாக' கூறப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்ல, தற்பொழுது ஏற்பட்டுவரும் மாற்றங்கள் மற்றும் உருமாற்றங்களுக்கு இடையே இந்த உறவு பலப்பட்டு வருவது மிக முக்கியமானது என்று வெளியுறவு அமைச்சக அறிக்கை அழுத்தமளித்திருப்பது இந்த வார்த்தைகளில் பொதிந்து கிடக்கும் பொருளென்ன என்று ஆழமாக சிந்திக்கத் தூண்டுகிறது.

இலங்கையில் இனப் பிரச்சினை தொடர்பாக இதுவரை மத்திய அரசு கடைப்பிடித்து வந்த நிலையென்பது: போரினால் தீர்வு காண முடியாது. பேச்சுவார்த்தையின் மூலம் தான் நிலைத்த, நீடித்த அரசியல் ரீதியான தீர்வு காணமுடியும் என்பது. ஆனால் அந்த நிலைமாறிவிட்டது என்பதையே வெளியுறவு



அமைச்சர் பிரணாப் முகர்ஜி வெளியிட்ட தனித்த அறிக்கை காட்டுகிறது.

அதாவது 23 ஆண்டுகளாக நடந்த மோதலில் பெற்ற இராணுவ வெற்றிகள் வடக்கு மாகாணத்தில் இயல்பு வாழ்க்கையை நிலைநிறுத்தும் ஒரு அரசியல் வாய்ப்பை அளித்துள்ளதாக நான் வலியுறுத்தினேன். தனது எண்ணமும் அதுதான் என்று அதிபர் (ராஜபக்ச) கூறினார்.

இலங்கை அரசுடன் இணைந்து, போரினால் கடும் பாதிப்பிற்குள்ளான தமழர்கள் உட்பட இலங்கையில் வாழும் அனைத்து மக்களும் இயல்பு வாழ்வைப் பெற விரைந்து பணியாற்றுவோம் என்று பிரணாப் முகர்ஜி கூறியுள்ளார்.

இதுவரை இராணுவ நடவடிக்கைகள் தீர்வைத் தராது என்று கூறிவந்த நிலைமாறி, இராணுவ வெற்றிகள் வடக்கு மாகாணத்தில் இயல்பு வாழ்க்கையை நிலைநிறுத்தும் என்று கூறியுள்ளார். எந்த அடிப்படையில் இதனைக் கூறுகிறார் அமைச்சர் பிரணாப் என்று தெரியவில்லை. இலங்கை அரசிற்கும், அதன் இராணுவத்திற்கும் எதிரான போராட்டம் முறியடித்து பெறும் வெற்றி இயல்பு வாழ்வை (வடக்கில்) உறுதி செய்யுமா?

இதைத்தானே இலங்கை அதிபர் ராஜபக்ஷவும் கூறினார்! போர் நிறுத்த ஒப்பந்தத்தை தன்னிச்சையாக முறித்துக்கொள்ளும் அறிவிப்பை வெளியிடுவதற்கு முன்னர், இராணுவ நடவடிக்கைகள் மூலம் அரசியல் தீர்வு காணும் வழி பிறந்துள்ளது என்று ராஜபக்ஷ கூறினாரே? அதனை அன்றைக்கு எதிர்த்த மன்மோகன் அரசு இன்றைக்கு ஏற்றுக் கொள்கிறதா?

அதுமட்டுமா? போரினால் கடும் சீரழிவிற்கு உள்ளான வடக்குப் பகுதியின் மறு புனரமைப்பிற்கும், உட்கட்டுமானம் உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்துவதற்கும் இலங்கை அரசுடன் இணைந்து பணியாற்றுவோம் என்று பிரகடனமே செய்துள்ளார் பிரணாப் முகர்ஜி. திருகோணமலையில் இந்தியாவின் தேச அனல் மின் கழகம் அமைத்துவரும் 500 மெகாவோட் மின் நிலையம் பெருமையளிப்பதாகவும் கூறியுள்ளார்.

இதிலிருந்து புரிந்துகொள்ள முடிவது என்னவென்றால், இலங்கையின் உள்நாட்டுப் பணிகளில் இந்தியா நேரடியாக இறங்கும். எப்படி ஆப்கானிஸ்தானில் அந்நாட்டு அரசின் ஒப்புதலுடன் எல்லைப் பகுதிகளில் சாலை அமைப்பது உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்பு பணிகளில் இந்தியாவின் பொதுத்துறை நிறுவனங்கள் ஈடுபடுகின்றனவோ அதைப் போன்ற ஒரு பணிகூட்டாண்மையை இலங்கை அரசுடன் செய்துகொள்ள மன்மோகன் அரசு முடிவு செய்துள்ளது என்பதே.

இதற்கு தமிழர்கள் எதிர்ப்பு தெரிவிக்கும் பட்சத்தில் அதனை ஒடுக்க இந்தியா நேரடியாகவோ, மறைமுகமாகவோ உதவும். அது இராணுவத் தலையீடாகவும் ஆகலாம்.

ஆக, போர் நிறுத்தம் செய்ய தமிழர்கள் விடுத்த வேண்டுகோளை பயன்படுத்திக் கொண்டு, தமிழர்களின் வாழ்வுரிமை உள்ளிட்ட அரசியல் அபிலாஷைகளை புறந்தள்ளிவிட்டு, தமிழனைத் தாண்டிய ஒரு உறவை இலங்கை அரசுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ளது மன்மோகன் அரசு.

### தமிழன்

அப்படியானால் தீர்வைப் பற்றி பேசியதெல்லாம் என்ன ஆனது என்ற கேள்வி எழுகிறதா? அதுதான் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதே...

இந்திய -இலங்கை ஒப்பந்தத்தின்படி, 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தை



நடைமுறைப்படுத்த உறுதி பெறப்பட்டுவிட்டதே!

தமிழினத்தின் தலைவர்களே, தமிழக, ஈழத் தமிழர்களே... என்ன செய்யப் போகிறீர்கள்?.

# மோதல்களுக்கிடையில் சிக்கித் தவிக்கும் அப்பாவி மக்களின் அவலத்தைப் போக்க இரு தரப்பும் முன் வரவேண்டும்

## ஐ.தே.க.வலியுறுத்து

முல்லைத்தீவு பிரதேசத் தில்இடம்பெற்று வருகின்ற இருதரப்பு மோதல்களுக்கு இடையில் சிக்கித் தவிக்கும் அப்பாவித்தமிழ்மக்கள் ,அங்கு பேரவலத்திற்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். வன்னி மக்கள்எனது சகோதரர்கள் எனஉரை நிகழ்த்துகின்ற ஜனாதிபதியின் நடவடிக்கைகள் அந்த மக்களுக்கு எந்தவித விமோசனத்தையுமே பெற்றுக் கொடுக்கவில்லை எனஐக்கிய தேசியக் கட்சி விசனம் தெரிவிக்கின்றது.உணவு, உறையுள்,சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் எதுவுமே அற்ற நிலையில் பரிதவிக்கும் இரண்டு லட்சத்திற்கும் அதிகமான அப்பாவி மக்களின் தேவைகளை உடனடியாகப் போக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்ற அதேவேளை மக்களின் நலன் கருதி விடுதலைப் புலிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அக்கட்சியின் கம் பஹா மாவட்ட எம்.பி. டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜயலத் எம்.பி இங்கு மேலும் கூறுகையில் தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் ஐக்கிய தேசியக்கட்சி மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டது. தமிழ் மக்களின் பிரச்சினை களை தீர்த்துவிட வேண்டும் என்பதற்காக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்தது. இது நாடறிந்த உண்மையாகும்.தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினருக்குமிடையே இடம்பெற்றுள்ள உக்கிர மோதல்களுக்கு மத்தியில் சுமார் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான அப்பாவித் தமிழ் மக்கள் சிக்குண்டு தவிப்பதனால் அங்கு பாரிய மனிதப் பேரவலம் நிலவிக் கொண்டிருக்கின்றது.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு வைத்தியசாலைகள் தாக்குதல்களுக்கு இலக்கானதன் காரணமாக உடையார்கட்டு மற்றும் தருமபுரம் வைத்தியசாலைகளில் சிகிச்சைக்கு வருவோரின் எண்ணிக்கை கட்டுக்கடங்காதிருக்கின்றது.அத்துடன் குறிப்பிட்ட வைத்திய சாலை களில் மருந்துப் பொருட்கள் மருத்துவ உபகரணங்கள் இல்லை. அங்கிருந்து பணியாற்ற போதிய வைத்தியர்கள் இல்லை.

மூவாயிரத்திற்கும் அதிகமான கர்ப்பிணித் தாய்மார்களின் நிலைமைகள் மிகவும் கவலைக்கிடமாக இருக்கின்றன. சிறுவர் முதியோர் என சகலரும் உணவின்றியும் தங்குவதற்கு இடமின்றியும் அவலப்படுகின்றனர். எந்தவொரு அடிப்படை வசதிகளும் அற்றவர்களாய் அடிப்படை உரிமை மற்றும் மனித உரிமை அவமதிக்கப்பட்டவர்களாய் உள்ள அந்த மக்களின் உயிர்ப் பிரச்சினைகுறித்து இன்றையஅரசாங்கம் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றது எனக் கேட்க விரும்புகிறேன்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு அரசஅதிபர்கள்இன்று வவுனியாவில் இருந்தே செயற்பட்டு வருகின்றனர்.இப்படி இருக்கும் போது சிக்கித் தவிக்கும் அப்பாவிகளின் தேவைகளை அரசாங்கம் எப்படி நிறைவேற்றப் போகின்றது.

வன்னி நிலைமைகளை அரசாங்கம் எவ்வளவு தான் மூடிமறைக்க முற்பட்டாலும் தேசிய மற்றும் சர்வதேச ஊடகங்களின் ஊடாக வெளிப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. என்றார். (ஓ-6)

# இந்திய அணி திரில் வெற்றி; கண்டாம்பியின் போராட்டம் வீண்

## சாதனை படைக்காமல் முரளிதரன் ஏமாற்றம்

(கொழும்பு)

விறுவிறுப்பாக நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணியை வீழ்த்தியது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 5 ஒருநாள், ஒரு இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது போட்டியில் இந்திய அணி வெற்றிபெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்ற நிலையில் இரண்டாவது போட்டி நேற்று பகலிரவு ஆட்டமாக கொழும்பு பிரேமதாச விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களையிழந்து 256 ஓட்டங்களை எடுத்தது. இதில் யுவராஜ் சிங் 66 ஓட்டங்களையும் சேவாக் 26 பந்துகளில் (7 பவுண்டரிகள் அடங்கலாக) 42 ஓட்டங்களையும் ரெய்னா 29, காம்பீர் 27 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் குலசேகர, தூஷார மற்றும் மென்டிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் டில்சான் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தி சாதனை படைப்பார் என எதிர்பார்க்கப்பட்ட முரளிதரன் விக்கெட் எதனையும் வீழ்த்தாமல் ஏமாற்றமளித்தார்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 257 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி இறுதி வரை போராடி 48.2 ஓவர்களில் 241 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

ஒரு கட்டத்தில் 3 ஓவர்களில் 36 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 3 விக்கெட்டுக்களையிழந்து தடுமாறிய இலங்கை அணியை அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனா-கண்டாம்பி ஜோடியின் பொறுப்பான 100 ஓட்டங்கள் என்ற இணைப்பாட்டத்தின் மூலம் சரிவிலிருந்து மீண்டது.

எனினும் முரளிதரன் 3, குலசேகர, மென்டிஸ் என அடுத்தடுத்து ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர்.

இதில் நம்பிக்கையுடன் துடுப்பெடுத்தாடிய கண்டாம்பி 129 பந்துகளில் (9 பவுண்டரிகள் அடங்கலாக) 93 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தார்.


முன்னதாக அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனா 52, கபுகெதர 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பந்துவீச்சில் இஷாந்த் சர்மா 4 விக்கெட்டுக்களையும் பிரவீன் குமார், சகீர்கான் மற்றும் ஓஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 2:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது.

இப்போட்டியில் 57 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை வீழ்த்திய இந்திய அணியின் வெற்றிக்கு திருப்புமுனையமைத்த இஷாந்த் சர்மா ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது போட்டி நாளை மறுதினம் கொழும்பு பிரேமதாச விளையாட்டு அரங்கில் பகலிரவு ஆட்டமாக நடைபெறும்.



## ஜூனியர் ஆண்கள் பிரிவில் இந்திய வீரர் சம்பியன்

(மெல்பேர்ன்)

அவுஸ்திரேலிய ஓபன் ஜூனியர் ஆண்கள் பிரிவில் இறுதிப்போட்டி நேற்று நடந்தது. இதில் இந்திய வீரர் யுசி பாம்ரி-ஜேர்மனி வீரர் அலெக்சாண்டிரோஸ் மோதினார்கள். இதில் பாம்ரி 6:3, 6:1 என்ற நேர் செட் கணக்கில் வென்று சம்பியன் பட்டம் பெற்றார்.

ஜூனியர் பிரிவில் அவுஸ்திரேலிய ஓபன் பட்டத்தை கைப்பற்றிய முதல் இந்தியர் என்ற வரலாற்றுச் சாதனையை அவர் படைத்தார். ஜூனியர் பிரிவில் கிராண்ட்ஸ்லாம் பட்டம் பெற்ற 4ஆவது இந்தியர் ஆவார்.

இதற்கு முன்பு 1954, 1979, 1990ஆம் ஆண்டு விம்பிள்டன் போட்டிகளில் ஜூனியர் பிரிவில் ராமநாதகிருஷ்ணன், ரமேஷ் கிருஷ்ணன், லியாண்டர் பெயஸ் ஆகியோர் பட்டம் பெற்று இருந்தனர். 16 வயதான பாம்ரி டில்லியை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஜூனியர் பெண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் ரஷ்ய வீராங்கனை சம்பியன் பட்டம் வென்றுள்ளார். ரஷ்ய வீராங்கனை சீனியா பெர்வாக், பிரிட்டன் வீராங்கனை லாரர் ராப்சன்னை வீழ்த்தினார்.

## நான்காவது முறையாக செரினா சம்பியன்



அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் வென்று சம்பியனானார்.

கிராட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான அவுஸ்திரேலியன் ஓபன் டென்னிஸ் தொடர் மெல்பேர்னில் நடக்கிறது.

நேற்று நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், ரஷ்யாவின் டினரா சபினாவை 6:0, 6:3 என்ற நேர் செட்டில் வீழ்த்தி சம்பி யன் பட்டம் வென்றார்.

இதன் மூலம் செரினா வில்லியம்ஸ் அவு ஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் நான்காவது முறையாக (2003, 2005, 2007, 2009) சம்பியன் பட்டம் வென்றார்.

இது கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் செரி னா கைப்பற்றிய பத்தாவது (அவுஸ்திரேலி யன் ஓபன்-4, பிரெஞ்ச் ஓபன்-1, விம்பிள்டன் -2, யு.எஸ்., ஓபன்-3) சம்பியன் பட்டமாகும்.

## தொடர் சிம்பாவே வசம்

(ஜிம்ஹானா)

மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் வெற்றிபெற்ற சிம்பாவே அணி தொடரை 3:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்று தனதாக்கியது.


கென்யாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சிம்பாவே அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலிரண்டு ஒருநாள் போட்டிகளிலும் வெற்றிபெற்று சிம்பாவே அணி தொடரை 2:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந்நிலையில் மூன்றாவது ஒருநாள் போட்டி நேற்று ஜிம்ஹானாவில் நடைபெற்றது. இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கென்ய அணி 49.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 234 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஒபுயா 55 ஓட்டங்களையும் ஓபன்டா 49 ஓட்டங்களையும் ஒயுமா 33 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் கிறிமர் 4 விக்கெட்டுக்களையும் போபு பிறைஸ், உற்ஷயா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 235 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி அணித்தலைவர் உற்ஷயாவின் சிறப்பான அரைச்சதத்தின் மூலம் 48.2 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 236 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.



இதில் அணித்தலைவர் உற்ஷயா ஆட்டமிழக்காமல் 65 பந்துகளில் (6 பவுண்டரிகள் 2 சிக்ஸர்கள் அங்கலாக) 68 ஓட்டங்களையும் சிக்கும்புரா 43, முரிஸ்வா ஆட்டமிழக்காமல் 38 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஏகோன்டா 2 விக்கெட்டுக்களையும் ஒடியாம்போ, பூடியா, ரிகேசீலா மற்றும் கமான்டி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் சிம்பாவே அணி 5 போட்டிகள் கொண்ட தொடரில் 3:0 என்ற கணக்கில் வென்று தொடரை தனதாக்கியது.

## ஆஸி.-நியூசிலாந்து அணிகள் முதல் போட்டியில் இன்று மோதல்

(பேர்த்)

அவுஸ்திரேலிய, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் போட்டி இன்று பேர்த்தில் நடைபெறுகிறது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் செய்த நியூசிலாந்து அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது.

இதில் அவுஸ்திரேலியா 2:0 என தொடரை வென்றது. பின்னர் நாடு திரும்பிய நியூசிலாந்து அணி சுமார் இரண்டு மாதத்திற்கு பின்னர் ஒருநாள் தொடரில் விளையாட அவுஸ்திரேலிய வந்தது.

இவ்விரு அணிகளும் ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் மற்றும் ஒரே ஒரு இருபது-20 போட்டியில் மோதவுள்ளன. இவ்விரு அணிகள் மோதும் முதல் ஒரு நாள் போட்டி இன்று பேர்த்தில் நடக்கிறது.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக ஒருநாள் தொடரை இழந்த அவுஸ்திரேலிய அணி ஐ.சி.சி. தரவரிசையில் இரண்டாவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டது.

நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரை அவுஸ்திரேலியா கைப்பற்றும் பட்சத்தில் மீண்டும் முதலிடத்திற்கு முன்னேறலாம்.

இதுவரை இவ்விரு அணிகளும் 112 ஒருநாள் போட்டிகளில் மோதியுள்ளன. இதில் அவுஸ்திரேலியா 78 போட்டிகளில் வெற்றி



பெற்று ஆதிக்கம் செலுத்தி வருகிறது. நியூசிலாந்து 30 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது. 4 போட்டிகளுக்கு முடிவு தெரியவில்லை. கடந்த 2007ஆம் ஆண்டுக்கு பின்னர் இவ்விரு அணிகளும் தற்போது ஒருநாள் போட்டியில் விளையாட உள்ளன.

# வடக்கு யுத்தம் இறுதிக்கட்டத்தில்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கின் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற யுத்தம் இறுதிக் கட்டத்தை அடைந்திருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

கடந்த 30 வருடங்களாக நிலவிவந்த இந்த பிரச்சினைக்கு, 2 வருடம் 4மாதங்கள் நிறைவடையும் நிலையிலேயே இறுதி கட்டத்தை அடைந்து விட்டதாக அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

எந்த தருணத்திலும் பாதிக்கப்பட்ட பொதுமக்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மோதல் இடம்பெறும் பிரதேசங்களில் இருந்து அப்பாவி மக்கள் வெளியேறும் பொருட்டே 48 மணித்தியால கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி இதன் போது தெரிவித்துள்ளார். (ந-5)

## ஈழத் தமிழருக்...

சிறுத்தைகள் கட்சியின் உறுப்பினரான திண்டுக்கல் மாவட்டத்தை சேர்ந்த பாலுச்சாமி ரவி (வயது 39) என்பவரே இவ்வாறு தீக்குளித்தவராவார். தனது நான்கு பிள்ளைகளில் ஒன்றுக்கு அவர் பிரபாகரன் என்று பெயர் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

## பாதுகாப்...

நாயகம் கோரிக்கை விடுக்கிறார் என்று பான் கீ மூனின் ஊடக அலுவலகம் வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

வன்னி மற்றும் ஏனைய முரண்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து வரும் பொதுமக்கள் சர்வதேச தராதரங்களுக்கு அமைவாக நடத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்தைக் கோரியுள்ள ஐ.நா. செயலாளர் நாயகம் அவர்களுடைய நடமாடும் சுதந்திரம், அடிப்படை வசதிகள் உறுதிப்படுத்தப்படுவதுடன் மனிதாபிமான உதவி முகவர்கள் அவர்களைச் சென்று பார்வையிடும் வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும் என்றும் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார். (ந-5)

# படையினரின் அறிவிப்பு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை, பாசையூர், திருநகர் மற்றும் குருநகர் கரையோரப் பகுதி மக்களிற்கு இராணுவத்தினர் நேற்று இரவு ஒலி பெருக்கி மூலம் அறிவித்தலொன்றை விடுத்துள்ளனர்.

இப்பிரதேசங்களில் கசிப்பு உற்பத்தி, கஞ்சா வியாபாரம், கொலை, கொள்ளை போன்ற வேண்டத்தகாத செயற்பாடுகள் தலைதூக்கியுள்ளது எனவும் இவற்றைத் தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் படையினரிற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் ஊரடங்கு வேளைகளில் உலாவுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உறவினர் வீடுகளில் தங்குபவர்கள் அருகிலுள்ள இராணுவ காவலரணில் அறியத்தரவேண்டும் எனவும் அறிவித்தல் விடுத்துள்ளனர்.

கலாசார சீரழிவுகளை தடுக்கும் நடவடிக்கைகளில் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அறிவித்துள்ள படையினர் 060-221 9752, 021-222 3708 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தகவல் தருமாறும் கேட்டுள்ளனர். (ந-14-51)

## பொதுமக்களை...

இருந்தாலும் இந்தக்காலக்கெடுவை நீடிக்கச் செய்வதற்காகவும் அப்பாவி மக்கள் பத்திரமாக வெளியேறவும் இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் சமரசம் செய்யும் முயற்சியில் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் நேற்று மும்முரமாக ஈடுபட்டன.

இது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் கூறுகையில்,

சண்டை நடக்கும் பகுதிகளில் இருந்து காயமடைந்த பலரை பாதுகாப்பாக வெளியேற்ற விடுதலைப் புலிகளிடம் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தினோம்.

அதேபோல் அரச தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அவசர உதவி தேவைப்படின் பலரை வெளியேற்ற உதவ வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது என்றார்.

இருந்தாலும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் காயமடைந்தவர்கள் எத்தனை பேர் உள்ளனர் என்பதை அவர்கள் தெரிவிக்கவில்லை.

50 குழந்தைகள் உட்பட 350 பேரே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் மற்றும் ஐ.நா. அமைப்பினர் நேற்று முன்தினம் மீட்டுள்ளதாகவும் இந்த இரு அமைப்புக்களைச் சேர்ந்த ஏராளமான வாகனங்கள் காயமடைந்தவர்களை மீட்பதற்காக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் தரித்து நின்றதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-5)

## பெப்.4 இல் தமிழகம் முழுவதும்...

கூட்டம் தொடங்கும்போது ஈழத்தமிழர்களுக்காக தீக்குளித்து உயிர்த்தியாகம் செய்த இளைஞர் வீரத் தமிழ்மகன் முத்துக்குமாருக்கு வணக்கம் செலுத்தப்பட்டது. மேடையில் அவரது திருவுருவப்படம் மலர்மாலை அணிவித்து வைக்கப்பட்டிருந்தது.

கூட்டத்திற்கு தலைமை ஏற்ற இயக்கத்தின் ஒழுங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் உரையாற்றுகையில்,

ஆறரைக் கோடி தமிழர்களின் பிரதிநிதிகள் இங்கு கூடியிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இக்கூட்டத்தில் கலந்துகொண்ட அரசியல் கட்சி தலைவர்களும், அமைப்புக்களும் ஈழத்தமிழர்களுக்காக தனித்தனியாக போராடி வந்துள்ளோம்.

இலங்கைத் தமிழர்கள் சம உரிமையுடன் அமைதியாக வாழ்வதற்கு அனைவரும் ஒன்றுபட்டு குரல் கொடுக்கவில்லையே என்ற கவலை இதுவரை இருந்தது. இன்று முதன் முறையாக தமிழர்களுக்காக அனைவரும் ஒன்றுபட்டிருக்கிறோம்.

இது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அச்சத்தையும், உலகத் தமிழர்களுக்கு உற்சாகத்தையும் நெகிழ்ச்சியையும் அளித்துள்ளது.

இந்த இயக்கம் என்பது அரசியல் சாதி, மத,இன, மொழி ஆகிய எல்லாவற்றையும் கடந்து அவரவர்களுக்கு தனித்தனியாக கொள்கைகள் இருந்தாலும் தமிழர்களுக்காக ஒன்றுபட்டிருக்கிறோம்.

இக்கூட்டத்தில் கலந்து கொள்ள தி.மு.க., அ.தி.மு.க.,காங்கிரஸ், திராவிடர் கழகம், மார்க்சிஸ்ட் ஆகிய கட்சிகளுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது.

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தை பொறுத்தவரை எந்தவித வன்முறைக்கும் இடம் தராமல் யாரையும் இழிவுபடுத்துவதோ, அல்லது எந்தத் தலைவர்களின் படங்கள் மற்றும் சிலைகளை அவமதிப்பதோ அல்லது உருவப் பொம்மைகளை எரிப்பதோ கூடாது என்பதுதான் கொள்கை.

இலங்கைத் தமிழர்களுக்கு விடிவு பிறக்க நாம் ஒன்றுபட்டு உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும். மாற்றுக்கருத்து கொண்டவர்களையும் அவர்களின் மனதை மாற்றி நம்முடன் இணைந்து செயற்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்வோம் என்றார் பழ.நெடுமாறன்.

அதன் பின்னர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை ஊடகவியலாளர்களிடம் பழ.நெடுமாறன் தெரிவிக்கையில்,

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் தமிழகம் தழுவிய அளவில் பெப்ரவரி 4 ஆம்திகதி பொதுவேலை நிறுத்தம் நடத்துவது என்றும் 7ஆம் திகதி மாலை 4 மணிக்கு நகரம், கிராமம் என்று எல்லா இடங்களிலும் தமிழர்கள் ஒன்று கூடி கறுப்புக் கொடி ஊர்வலங்கள் நடத்துவது என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பெப்ரவரி 5ஆம் திகதி இந்த பாதுகாப்பு இயக்கம் மீண்டும் கூடி அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து முடிவு செய்து அறிவிக்கும் என்றார்.

கூட்டத்தில் பேசிய பல்வேறு கட்சிகள், அமைப்புக்களின் தலைவர்களும், பிரதிநிதிகளும் இந்த இரு போராட்டங்களையும் வெற்றிகரமாக நடத்த முழு ஒத்துழைப்பு அளிக்கப்படும் என்று தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில்,பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் இராமதாஸ், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு, மாநில செயலாளர் தா.பாண்டியன், பாரதிய ஜனதா கட்சியின் தேசிய செயலாளர் திருநாவுக்கரசர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சிகளின் தலைவர் தொல்.திருமாவளவன்,தேசியவாத காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவர் திண்டிவனம் இராமமூர்த்தி உட்பட தமிழகம் முழுவதும் இருந்து வந்திருந்த நூற்றுக்கும் அதிகமான அமைப்புக்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் அதிகமான பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (ந-5)

## விசேட...

வைத்தியசாலையின் தகவல்களுக்கு அமைய சிறுவர்கள்,முதியவர்கள் உட்பட 200இக்கும் அதிகமானவர்கள் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் சிறுவர்களும் முதியவர்களும் எனக் கூறப்படுகிறது. அத்துடன் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால் வவுனியா வைத்தியசாலையில் மருந்துப் பொருள்களுக்குத் தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ந-5)

## பாதுகாப்பு வலயத்தில்...

டுள்ளன.

இதேவேளை உடையார்கட்டு பகுதி நோக்கி நேற்றுக்காலை 5.30 மணியளவில் இருந்து தொடர்ச்சியாக பீரங்கித் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதில் 6 பொதுமக்கள் கொலை செய்யப்பட்டுள்ளதுடன் 17 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இதேவேளை புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள இடம்பெயர்ந்த குடியிருப்பு பகுதியில் நடந்த பீரங்கித் தாக்குதலால் 3 பேர் கொலை செய்யப்பட்டுள்ளதுடன் 12 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இதேவேளை தேவிபுரம், தேராவில், மூங்கிலாறு, வலைஞர்மடம் ஆகிய பகுதிகளில் நேற்று நடத்தப்பட்ட பீரங்கித் தாக்குதலில் 12 பேர் பலியானதுடன் 40 பேர் காயமடைந்தனர்.

கடுமையான பீரங்கித் தாக்குதல் எல்லா இடங்களிலும் தொடர்வதாலும் மக்கள் நாலா பக்கமும் உயிரைப் பாதுகாக்க சிதறி ஓடுவதாலும் கொல்லப்பட்ட காயமடைந்தவர்களின் பெயர் விபரங்களை சேகரிக்க முடியாதிருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-5)




## 48 மணித்தியால அவகாசம்...

போர் நடைபெறும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள பொதுமக்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்வதற்காக 48 மணிநேர அவகாசத்தை அரசு அறிவித்திருந்தது.

அரசின் அறிவிப்பு முடிபடைந்த நிலையில் 106 பேர் மட்டுமே வவுனியாவுக்கு வந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. சுமார் இரண்டரை இலட்சம் பேர் யுத்தம் நடைபெறும் வன்னிப் பகுதியில் உள்ளனர்.

48 மணிநேர யுத்த நிறுத்தம் முடிபுற்ற நிலையில் யுத்தம் உச்சக்கட்டத்தை அடையும் என்பதால் பொதுமக்கள் தரப்பில் பாரிய உயிரிழப்புக்கள் ஏற்படும் அபாயம் இருப்பதாக மனிதநேய அமைப்புக்கள் அபாய ஒலி எழுப்பியுள்ளன.

புலிகளுடன் போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை. இரு தரப்புச் சண்டையால் பாதிக்கப்பட்டுள்ள அப்பாவி மக்களை விடுவிக்க 48 மணிநேர கெடு மட்டுமே விதித் துள்ளோம்.

அந்த கெடு முடிபடைவதற்குள் புலிகள் தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள அப்பாவி மக்களை பாதுகாப்பான பகுதிகளுக்கு செல்ல அனுமதிக்க வேண்டும்.

இல்லையெனில் பொதுமக்களும் கடும் தாக்கு-தலை எதிர்கொள்ள நேரிடும் என மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க 48 மணிநேர யுத்த நிறுத்த அவகாசத்தில் 26 பேர் மட்டுமே அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு சென்றுள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். (ந-5)

யாழ்.நகரில் ஒரு புதுமையின் தொடக்கம்

LITTLE CHUTTYS' MONTESSORI







ஆரம்பம்: 28-02-2009

வயது: 3 முதல்

தமிழ், ஆங்கில மொழி மூலமான அங்கீகாரம் பெற்ற புதிய பரிணாம வளர்ச்சிக்கான ஆயத்தக்களம் DR.MARIA MONTESSORI ஆல் உருவாக்கப்பட்ட ஐம்புலன்களின் முழுமையான வளர்ச்சிக்குத் தேவையான தொடுகல்வி உபகரண செயன்முறைகள் (SENSORIAL MATERIALS), இலகுவழி எழுத்து, வாசிப்பு (PHONETIC READING) பயிற்சிகள், சிறுவர் பாடல்கள், கதைகள் போன்ற திரைப்படக் காட்சிகள் உள்ளடங்கலான மாறுபட்ட கல்விச் சூழல்

வரையறுக்கப்பட்ட அனுமதிகள் மட்டும்

-நிர்வாகி

தொலைபேசி இலக்கம்: 071 5357592

(2221)

இல. 05, புறூடி முன் ஒழுங்கை, கண்டி வீதி,யாழ்ப்பாணம்.

ஷரு மல்ரி ரெக்னிக்கல் ஸ்பொட்

KKS. றோட், கோண்டாவில்,
(துரைவீதிக்கு அருகில்,
சிவம் ரெக்ஸ் ரைல்ஸ் மேல்மாடி)



மகளிருக்கான குறுகியகால பயிற்சிகள்

08.02.2009 ஆரம்பிக்கப்படுகிறது

பயிற்சிகள்:-6 மாதகால அடிப்படை தையல் பயிற்சிகள், 3மாதகால கேக் ஐசிங், கூந்தல் அலங்காரம், பப்ரிக் Painting, பூவேலை 10 நாள் Facial, மணப்பெண் அலங்காரம்,நக அலங்காரம். கிழமை நாள் வகுப்புக்களும் /சனி ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பிக்கவுள்ளது.

மேலும் விபரங்களுக்கு தினமும் 10-3 வரை நேரில் அறிந்து கொள்ளலாம்

-நிர்வாகத்தினர்

(2220)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.02.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.